இது ரகசியம் அல்ல!


நேற்று பிரதமரின் உத்தியோக பூர்வ இல்லமான அலரிமாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் யாழ்ப்பாண ஊடகங்கள் பற்றிய விடயமும் பேசப்பட்டது.

பேசியவர் பக்கம் 02


பக்கங்கள்: 13

காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 பங்குனி 21 வெள்ளிக்கிழமை 03.04.2020 கதிர் 149


## எந்த நெருக்கடிக்கு மத்தியிலும்

# மேயில் தேர்தலை நடத்தி முடிப்பதில் அரசு முனைப்பு!

கொழும்பு, ஏப். 03

ஒத்திவைக்கப்பட்ட பொதுத் தேர்தலை, மேலும் தள்ளிப் போடாமல் எந்த நெருக்கடிகளுக்கு மத்தியிலும், மே மாத இறுதியில் நடத்தி முடித்து விட வேண்டும் என்பதில் அரசுத் தலைமை முனைப்பாக இருப்பதாக விடய மறிந்த உள்வீட்டு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. பக்கம் 02

## கொரோனா தொற்றினால் நான்காவது நபரும் சாவு!

கொழும்பு, ஏப். 03

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிச் சிகிச்சை பெற்று வந்த 58 வயதுடைய ஒருவர் நேற்று வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார்.

இதன்மூலம் இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பக்கம் 02

## 151 பேருக்கு கொரோனா!

கொழும்பு, ஏப். 03

கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட மேலும் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார் எனச் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதையடுத்து, நாட்டில் கொரோனா தொற்றினால் பக்கம் 02

## தெஹிவளை வாசியின் இறுதி நிகழ்வு இன்று

கொழும்பு,ஏப்.03

கொரோனா வைரஸ் தாக்கப்பட்டு நேற்று உயிரிழந்த தெஹிவளைவாசியின் உடல் இன்று காலைக்குள் தகனம் செய்யப்படுமென வைத்தியசாலைத் பக்கம் 02

## மருதானையில் உயிரிழந்தவருடன் 300பேர் தொடர்பில் இருந்தனராம்

கொழும்பு,ஏப்.03

கொரோனா நோயினால் பாதிக்கப்பட்டு நேற்று முன்தினம் உயிரிழந்த நபருடன் 300 பேர் தொடர்பில் இருந்தனர் எனக் கூறப்படுகின்றது.

கொரோனா வைரஸ் காரணமாக நேற்றைய தினம் கொழும்பு – மருதானைப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்திருந்தார்.

இவருடன் பக்கம் 02

## ஆறு பேருக்கு தொற்றில்லை!

யாழ்ப்பாணம், ஏப். 03

யாழ் போதனா வைத்தியசாலையில் தங்கியிருக்கும் 6 பேருக்கு கொவிட் – 19 பரிசோதனை செய்யப்பட்டதில் அவர்களுக்கு கொரோனா தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சந்தேகத்தின் பக்கம் 02

# தேர்தல் குறித்து ஆலோசனை உயர்நீதிமன்றிடம் பெறுங்கள்!

## ஜனாதிபதிக்கு தேர்தல் ஆணையம் பரிந்துரை

கொழும்பு, ஏப். 03

நாட்டில் தற்போதுள்ள நிலைமையின் பிரகாரம், அரசமைப்பில் சொல்லப்பட்டுள்ள விடயங்களுக்கு ஏற்ப நாடாளுமன்றத் தேர்தலை நடத்தும் திகதி தொடர்பில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளமையால், உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டலின் கீழ் செயற்படுவது சிறந்தது எனத் தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளது. பக்கம் 02

## 6 ஊடகவியலாளர்கள் உட்பட எண்மருக்கு நோய்த் தொற்று?

கொழும்பு,ஏப்.03

தடைசெய்யப்பட்ட களுத்துறை அட்டுலுகம பகுதிக்குள் சென்று செய்தி சேகரித்தவர்கள் என்று கூறப்படும் கொழும்பிலுள்ள இரண்டு பிரதான ஊடகங்களைச் சேர்ந்த 6 ஊடகவியலாளர்களுக்கு கொரோனா தொற்று அறிகுறி உள்ளதாக சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. பக்கம் 02

# நாடாளுமன்றை மீளக் கூட்டும்படி வலியுறுத்த கட்சித் தலைவர்கள் கூட்டம் பொருத்தமற்றது

## நேற்று அலரி மாளிகைச் சந்திப்பில் ரணில் தெரிவிப்பு



கொழும்பு,ஏப்.03

“கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக் கூட்டும்படி வலியுறுத்துவதற்கு கட்சித் தலைவர்களின் இந்தக் கூட்டம் பொருத்தமற்றது. பிறிதொரு முறையில் ஜனாதிபதி, பிரதமருடன் அந்த விடயத்தை நாம் கையாளுவோம்.”

– இப்படி நேற்று அலரிமாளிகையில் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் இறுதியில் பக்கம் 02

## 10,039 பேர் கைது!

கொழும்பு, ஏப்.03

ஊரடங்குச் சட்டத்தை மீறிய 10,039 பேர் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். பக்கம் 02

## பிரதமர் அலுவலகத்துக்கு முறைப்பாடுகள் வட மாகாணத்திலிருந்துதான் அதிகமாம்!

கொழும்பு,ஏப்.03

உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் தொடர்பாக ஏற்படும் மக்களின் சிக்கல்களை அறிவிக்க பிரதமர் அலுவலகத்தால் தொலைபேசி இலக்கங்கள் அறிவிக்கப்பட்டிருந்தன. அந்த இலக்கங்களுக்கு வடக்கு மாகாணத்திலிருந்து அதிக எண்ணிக்கையான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனத் தெரியவருகின்றது.

தொடர் ஊரடங்கு காரணமாக மக்கள் பெரிதும் பக்கம் 02

## ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்; இரு முக்கிய நபர்கள் கைது

கொழும்பு,ஏப்.03

கடந்த ஆண்டு ஈஸ்டர் ஞாயிறன்று நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களோடு தொடர்புடையை இரு பிரதான சந்தேகநபர்களைத் தாங்கள் கைது செய்திருக்கின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர்.

ஒருவர் கொத்தட்டுவவிலும் மற்றவர் மட்டக்குளியிலும் பக்கம் 02

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாருமல்லர். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தான்.

இந்த விவகாரம் குறித்து சில தினங்களுக்கு முன்னர் இப்பத்தியில் பிரஸ்தாபித்திருந்தேன்.

ஆள்களை ஒன்று கூட வேண்டாம் என்றும், எப்போதும் சமூக இடைவெளியைப் பேணுங்கள் என்றும் அரசு அறிவித்துக் கொண்டிருக்க –

மறுபுறத்தில் யாழ்ப்பாண ஊடகம் ஒன்றில் ஒரு மதப் பிரார்த்தனைக்காக மக்கள் எல்லோரையும் ஒன்று கூடுங்கள் என்று கோரும் பெரிய விளம்பரம் பிரசுரமானமை குறித்தும், அது, அரச உயர்பீடத்தில் மிகவும் ஆழமாக ஆராயப்படுகின்றது என்றும் நான் இப்பத்தியில் ஏற்கனவே கோடி காட்டியிருந்தேன்.

அத்தகைய விளம்பரம் அந்தச் சூழலில் ஆசிரிய பீடத்தில் இருக்கும் கடை நிலை அலுவலரின் கைக்குச் சென்றிருந்தால் கூட அதற்கு அந்தப் பணியாளர் பிரசுர அனுமதி அளித்திருக்கமாட்டார் என்று அடித்துக் கூறலாம்.

ஆனால், அந்த ஊடகத்தில், அந்தச் சமயத்தில், அந்த விளம்பரம் பிரசுரமானதுமே பலரும்தான் அதிர்ந்து போனார்கள்.

இந்தத் துறையில் நீண்ட காலம் இருப்பவன் என்ற முறையில் பலரும் என்னுடன் தொடர்பு கொண்டு இது குறித்து விசனம் தெரிவித்தனர்.

நிர்வாகி தன்னுடைய தனிப்பட்ட அரசியல் இலக்குகளை எட்டுவதற்காக ஆசிரிய பீடத்தின் முக்கியத்துவத்தை சிதறடித்த நிர்வாகச் சீர்கேட்டின் விளைவுதான் இது என்பது எனக்குப் புரிந்தது.

இனி, விடயத்துக்கு வருவோம்.

நேற்றைய கூட்டத்தில் இந்த விளம்பரத்தின் பிரதி ஒன்றைக் கையில் தூக்கி வைத்து உயர்த்தி ஏனைய தலைவர்களுக்குக் காட்டினார் மஹிந்தர். கூட்டமைப்பின் முன்னாள் எம்.பியான சுமந்திரனை எட்டிப் பார்த்து அவருக்கும் காட்டியபடி, அவருக்கும் சேர்த்துச் கூறுவது போல கருத்து வெளியிட்டார் பிரதமர்.

*"இந்த நெருக்கடி சமயத்தில் இப்படி எல்லாம் கூட செய்திகள், விளம்பரங்கள் பிரசுரிக்கின்றார்கள். ஆச்சரியமாக இருக்கின்றது.*

*"யாழ்ப்பாண ஊடகங்களைக் கொஞ்சம் பொறுப்பாக நடந்து கொள்ளச் சொல்லுங்கள். இந்த அறிவித்தலைப் பிரசுரித்த ஊடகத்தின் நிர்வாகியையும் எங்களுக்குத் தெரியும். இனிமேலாவது கவனமாகச் செயற்படச் சொல்லுங்கள்!"*– என்றார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

அதைத் தலையாட்டி, தலையாட்டி ஆமோதித்தார் சுமந்திரன் – ஏதோ தாம் அந்த நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு அத்தகைய தவறு ஏதும் இனி நேராமல் பார்த்துக் கொள்வதைப் பொறுப்பெடுப்பவர் போல.

ஆனால், அது அவரால் முடியாது. என்றாலும் பிரதமர் கூறும்போது தலையாட்டி ஏற்றுக்கொண்டு, ஒப்புக் கொள்வதைத் தவிர அவருக்கு வேறு வழி இருக்கவில்லை.

ஏன், என்று கேட்கின்றீர்களா? அந்த ஊடகத்தின் முதலாளி என்ற ஒரே காரணத்துக்காக மட்டும்தான் சுமந்திரனின் கட்சி – மாவை, சம்பந்தன் அணி – அந்த முதலாளிக்கு, ஊடகப் போராளி என்ற பட்டத்தோடு கட்சிக்குள் இடமும் முன்னுரிமையும் கொடுத்தது. அப்படி இருக்கும் போது 'நான் வேறு, அந்த ஊடகம் வேறு' என எப்படி சுமந்திரன் பின்வாங்க முடியும்? ஆகவே சேர்ந்த குற்றத்துக்குத் தலையாட்டி வைத்தார் என்று கருதுவோம்...!

–மின்னல்–

## 10, 0939 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 2,489 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த 20 ஆம் திகதி முதல் நேற்று மாலை 6 மணிவரையான காலப்பகுதியில் இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

(நேற்றுக் காலைநிலைவரம் பற்றிய செய்தி 3 ஆம் பக்கத்தில்)

## நாடாளுமன்றை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.தே.கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அந்தக் கூட்டத்தில் –

தற்போது எழுந்துள்ள தேசியப் பேரிடர் காரணமாக நாடாளுமன்றம் மீளக் கூட்டப்பட வேண்டும் எனத் தமிழ்த் கூட்டமைப்பின் எம்.ஏ.சுமந்திரன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ரவூப் ஹக்கீம் ஆகியோர் வலியுறுத்தினர்.

விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில்ல, விஜயதாஸ ராஜபக்ஷ, வண அத்துரலிய தேரர் போன்றோர் அதனை எதிர்த்தனர்.

இதில் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க அது குறித்துக் கருத்து வெளியிட்டார்.

"நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுவது அவசியமும், அவசரமுமானதுதான். அது தொடர்பில் சுமந்திரன் இங்கு கூறிய கருத்துக்கள் மிகமிக முக்கியமானவை.

"ஆனால் அவை குறித்து நாம் பேசுவதற்கு இது பொருத்தமான இடம் அல்ல.

"நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுவதாயின் அதனைச் செய்ய வேண்டியவர் ஜனாதிபதிதான். அவர் இங்கு இல்லை.

எனவே இந்தக் கூட்டமைப்பில் இது குறித்து நாம் தீர்க்கமான முடிவு எதனையும் எடுக்க முடியாது.

ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர் போன்றோருடன் வேறு தளத்தில் நாம் இந்த விடயம் குறித்துப் பேசுவோம். அதற்காக விரைவில் முயற்சிப்போம். – என்றார் ரணில் விக்கிரமசிங்க. (உ)

## 6 ஊடகவியலாளர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனையடுத்து அந்த 6 ஊடகவியலாளர்கள் உட்பட 8 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு பிரபல அச்சு ஊடகங்களில் கடமையாற்றும் இரண்டு ஊடகவியலாளர்களும், நான்கு புகைப்பட ஊடகவியலாளர்களும், அவர்கள் பயணித்த வாகனத்தின் இரண்டு சாரதிகளுமே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டவர்களாவர்.

சாரதிகள் இருவரும் நிறுவனங்களுக்கு சொந்தமான வீடொன்றிலும், ஏனையோர் தமது வீடுகளிலும் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கொவிட் 19 நோய் தொடர்பில் அறிக்கையிடல் குறித்து சுகாதார அமைச்சகத்திலிருந்து ஊடகங்களுக்கு 8 வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.

## மருதானையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பிலிருந்த 300 பேரும் தனிமைப்படுத்தப்பட உள்ளனர்.

இவர்களைப் புனானை நிலையத்தில் தனிமைப்படுத்தி வைக்க முடிவெடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் அந்நபர் வசித்த 3 மாடிக் குடியிருப்பு தொகுதியில் வசிக்கும் மக்களை சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுமாறு பொதுசுகாதார பரிசோதகர்கள் ஆலோசனை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்டுள்ளனர். அன்றாடம் உழைப்போர் நிவாரணங்கள் இன்றி நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

இந்தநிலையில், மக்களுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் தொடர்பாக ஏதாவது சிக்கல்கள் ஏற்பட்டால் அது தொடர்பில் அறிவிப்பதற்கு பிரதமர் அலுவலகத்தால் 5 தொலைபேசி இலக்கங்கள் வழங்கப்பட்டிருந்தன.

அந்த இலக்கங்களுக்கு வடக்கு மாகாணத்திலிருந்து பெரும் எண்ணிக்கையானோர் தொடர்பு கொண்டு முறைப்பாடுகளைத் தெரிவிக்கின்றனர்.

அந்த முறைப்பாடுகள் உடனடியாக மாவட்டச் செயலகங்களுக்கு பாரப்படுத்தப்படுகின்றன.

முறைப்பாடு செய்தவர்களின் விவரங்களை மாவட்டச் செயலகங்களுக்கு வழங்கி உடனடியாகப் பிரச்சினைகளைத் தீர்க்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது.

## மேயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரோனா நெருக்கடி உட்பட எந்தப் பின்னடைவுக்கு மத்தியிலும் அறிவிக்கப்பட்ட தேர்தலை நடத்தி முடித்து விட வேண்டும் என்பதில் அது தீவிரமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கொரோனா பாதிப்பு உக்கிரமடையாவிட்டால் –

கொரோனாவுக்கான அசை வியக்கக் கட்டுப்பாடுகள், ஊரடங்குகளுக்கு மத்தியிலும் –

'சமூக இடைவெளியை' பேணியபடி –

பொதுத் தேர்தலை நடத்தி முடித்து விட வேண்டும் என்று அரசுத் தலைமை கருதுகின்றதாம்.

தேர்தல் பிரசாரத்துக்காக மக்கள் கூட முடியாவிட்டாலும் –

வீடு வீடாகச் சென்று தேர்தல் பிரசாரம், பொதுக் கூட்டம் என்பவற்றுக்கு அனுமதிக்காமல் –

கூடியவரை வானொலி, தொலைக்காட்சி, சமூக ஊடகங்கள், இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் வாயிலான பிரசாரத்துக்கு ஊக்கமளித்து, அத்தோடு தேர்தலை நடத்தி முடிக்கலாம் என்று ஆட்சித் தரப்புக் கருதுவதாகத் தெரிகின்றது.

கொரோனாவுக்காகத் தேர்தலை மூன்று மாதங்கள் கடந்து ஒத்திவைத்தால், சில சமயங்களில் இதே காரணத்துக்காகத் தேர்தலை மேலும் பல மாதங்களுக்கு நடத்தி முடிக்க முடியாமல் போய்விடும் என்று ஜனாதிபதியும் அவரது ஆலோசகர்களும் கருதுகின்றனராம்.

1987 – 1988 காலப்பகுதியில் – ஜே.வி.பியின் ஆயுதப் புரட்சி இரண்டாவது தடவையாக வெடித்த வேளையில் ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் போன்றவை இதே போன்ற நெருக்கடிக்கு மத்தியில் தான் நடத்தி முடிக்கப்பட்டன என்று தமது முடிவுக்கு அரசுத் தலைமை காரணம் – விளக்கம் – கூறுவதாகவும் தெரிகின்றது.

எனினும் – அரசுத் தலைமையின் இந்தத் தீர்மானத்துக்கு சுதந்திர தேர்தல் ஆணையம் இணங்குமா என்பது குறித்தே அரசுத் தலைமை கவனம் கொள்வதாகக் கூறப்படுகின்றது.

எப்படியும் மே இறுதிக்கு முன்னர் தேர்தலை நடத்தி முடிக்கலாம் என்றால், அரசமைப்பு குழப்பம் ஏதும் நேராது என்று கருதும் அரசுத் தலைமை, அதே காரணத்தினால்தான் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுவது தொடர்பில் அதிகம் சிரத்தை காட்டவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் – கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் மூலம் ஏப்ரல் கடைசி வரையான காலத்துக்கே இடைக்கால – வரவு – செலவு அறிக்கை அங்கீகரிக்கப்பட்டிருப்பதால், அடுத்த மே மாதம் முழுவதுக்குமான அரச செலவினங்களை அத்தகைய நாடாளுமன்ற அங்கீகாரமின்றி ஜனாதிபதி நேரடியாக முன்னெடுப்பது சட்டச்சிக்கல் எதனையும் தரலாம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

அது குறித்து அரசுத் தலைமை சிந்திப்பதாகத் தெரிகின்றது.

அடுத்த இரண்டு, மூன்று வார காலத்தில் கொரோனாத் தொற்றுப் பரவல் வீச்சம் குறையுமானால் –

குறுகிய கால முன்னறிவிப்போடு மே கடைசியில் – பெரும்பாலும் மே 30ஆம் திகதி – பொதுத் தேர்தலை நடத்தலாம் என்று ஜனாதிபதி மட்டத்தில் ஆலோசிக்கப்படுவதாக மிகமிக நம்பகமாக அறிய வந்தது. (உ)

## ஈஸ்டர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்துக் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு சினமன்கிராண்ட் ஹோட்டலிலும், நீர்கொழும்புத் தேவாலயத்திலும் தாக்குதல் நடத்திய தற்கொலைத் தாக்குதல் நபர்களுக்கு போக்குவரத்து வசதி வழங்கியவரகள் இவர்கள் இருவரும் எனக் கூறப்பட்டது.

## ஆறு பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரில் அனுமதிக்கப்பட்ட 10 பேருக்கு நேற்று கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது. அவர்களில் ஆறு பேருக்கே கொரோனா தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டுள்ளது. (பிந்திய செய்தி 4 ஆம் பக்கத்தில்)

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழு நேற்று முன்தினம் கூடி இந்தத் தீர்மானத்தை எட்டியுள்ளதுடன், தீர்மானத்தை ஜனாதிபதியின் செயலாளருக்குக் கடிதமொன்றின் ஊடாக அறிவித்துள்ளது.

கொவிட் 19 வைரஸ் பரவுகின்றமையை கருத்திற் கொண்டு, ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி நடத்தப்படவிருந்த நாடாளுமன்றத் தேர்தல் வாக்கெடுப்பு நடவடிக்கைகளை பிற்போட்டதுடன், நாடாளுமன்றத் தேர்தல் வாக்கெடுப்பை மே மாதம் 14ஆம் திகதிக்கு பின்னரான திகதியொன்றில் நடத்த வேண்டும் என இதற்கு முன்னர் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தது.

இதன்படி, நாடாளுமன்றம் கூடும் திகதியொன்றை ஜனாதிபதி வர்த்தமானி ஊடாக மீண்டும் அறிவிக்க வேண்டும் என ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அதுவும், நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மூன்று மாத காலப் பகுதிக்குள் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, நாடாளுமன்றம் இந்த ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதியாவது கூட வேண்டியுள்ளது.

ஜூன் மாதம் முதலாம் திகதி நாடாளுமன்றம் கூட வேண்டும் என்றால், மே மாதம் 27 அல்லது 28ஆம் திகதிகளில் வாக்கெடுப்பை நடத்தவேண்டும் என்பதுடன், அதன் முதற்கட்ட நடவடிக்கைகளை ஏப்ரல் மாதம் 20ஆம் திகதியாவது ஆரம்பிக்க வேண்டும் என ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

நாட்டில் தற்போதுள்ள நிலைமையை அவதானிக்கும் போது, ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி அந்த நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியாத நிலைமை தோன்றியுள்ளதாக கூறும் தேர்தல்கள் ஆணைக்குழு, ஜூன் மாதம் முதலாம் திகதி நாடாளுமன்றம் கூடாத பட்சத்தில் அரசமைப்பில் பிரச்சினை எழும் எனவும் கூறியுள்ளது.

இதனால், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வை பெற்றுக்கொள்ள உயர்நீதிமன்றத்தில் வழிக்காட்டல் அவசியானது என தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளது.

## கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4 ஆக அதிகரித்துள்ளது.

கொழும்பு தொற்று நோயியல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்தவரே இவ்வாறு உயிரிழந்தார்.

## 151 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 151 ஆக உயர்வடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை நேற்று முன்தினம் 146 ஆக இருந்தநிலையில் நேற்று மேலும் 5 பேருக்கு தொற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில், 21 பேர் தொற்றுக்குள்ளாகி குணமடைந்து வெளியேறியுள்ள நிலையில் நால்வரின் உயிரிழப்பு பதிவாகியுள்ளது.

## தெஹிவளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல்கள் தெரிவித்தன.

இறந்தவரின் அடையாளம் குறித்து ஊடகங்களில் பல்வேறு தகவல்கள் பரவி வருகின்றன. அதனை உறுதிப்படுத்த முயன்றபோது, அவர் தெஹிவளைப் பகுதியைச் சேர்ந்த சிங்களவர் என்று வைத்தியசாலைத் தகவல்கள் குறிப்பிட்டன.

குடும்பத்தினர் அவரின் உடலைத் தூர இருந்து பார்வையிட்ட பின்னர் உடல் தகனம் செய்யப்படும்.

இந்த மரணத்தையடுத்து தெஹிவளைப் பகுதியில் சுகாதார, பாதுகாப்பு ஏற்பாடுகள் இரட்டிப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளன.

# தகுதியற்றோருக்கு ஊரடங்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் பொலிஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை

கொழும்பு,ஏப்.03

ஊரடங்கு சட்ட அனுமதிப்பத்திரத்தை தகுதியற்றவர்களுக்கு வழங்கும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஊரடங்கு அனுமதிப்பத்திரத்தைத் தவறாக பயன்படுத்தியுள்ளமை தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனப் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார்.

அத்தியவசிய தேவைகளுக்காக மாத்திரம் ஊரடங்கு சட்ட அனுமதிப்பத்திரத்தை வழங்குமாறு பொலிஸ் தலைமையகம் அனைத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊரடங்கு சட்ட அனுமதிப்பத்திரத்தைத் தவறாகப் பயன்படுத்துதல், அனுமதிப்பத்திரத்தின் மூலம் வேறு நபர்களை வாகனங்களில் ஏற்றிச் செல்லல் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஊரடங்குச் சட்ட அனுமதிப்பத்திரமின்றி நடமாடுபவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

இந்தக் காலப்பகுதியில் கைப்பற்றப்படும் வாகனங்கள் தனிமைப்படுத்தல் விதிமுறைகள் மற்றும் குற்றவியல் சட்டத்தின் கீழ் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தப்படும் என அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார்.

குறித்த வாகனங்கள் மீண்டும் உரிமையாளர்ளிடம் கையளிக்கப்படமாட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் தற்போது ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம், கண்டி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு மறு அறிவித்தல் வரை ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனினும், எஞ்சிய 19 மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவு எதிர்வரும் 6ஆம் திகதி காலை 6 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த ஏனைய செயற்பாடுகளின் பொருட்டு மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்துக்குத் தொடர்ந்தும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பில் பன்னிருவர் நேற்றுக் கைது

மட்டக்களப்பு,ஏப்.03

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவில் உள்ள பிரதேசங்களில் ஊரடங்கு சட்டத்தை மீறி வீதிகளில் நடமாடிய 12 பேரை நேற்றுத் தாம் கைது செய்துள்ளனர் என மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து நேற்று மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள பகுதிகளில் மேற்கொண்ட வீதிரோந்து நடவடிக்கையின் போது ஊரங்கு சட்டத்தை மீறி வீதிகளில் நடமாடிய 12 பேரைக் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்களை வரவழைத்து எதிர்வரும் மே மாதம் 13 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிட்டு பொலிஸ் பிணையில் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

## முக்கிய குற்றச் சந்தேக நபர்களின் பிணை மனுக்கள் நேற்று நிராகரிப்பு

கொழும்பு,ஏப்.03

கொரோனா தொற்றுப் பரவலைக் கருத்திற்கொண்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தம்மை ஏதேனுமொரு பிணை நிபந்தனை அடிப்படையில் விடுதலை செய்ய கோரி குற்றவாளிகளால் தாக்கல் செய்யப்பட்ட பெரும்பாலான மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

பாரிய போதைப்பொருள் கடத்தல்களில் ஈடுபட்டவர்களும் ஏனைய சில சந்தேகநபர்களும் பிணை மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

எனினும் அவற்றில் 90 வீதமான மனுக்களை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகள் நிராகரித்துள்ளனர்.

121 பிணை மனுக்கள் நேற்றுக் கொழும்பு மேல் நீதிமன்றத்தின் 5ஆம் இலக்க நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

சட்ட மா அதிபர் சார்பில் ஆஜராக சிரேஷ்ட சட்டத்தரணிகள் தெரிவித்த ஆட்சேபனையைக் கவனத்திற்கொண்ட மேல் நீதிமன்ற நீதிபதிகள், ஹெரோயின் கடத்தல்காரர்களின் பிணை கோரிக்கைகளை நிராகரித்துள்ளனர்.

இதுவரை சிறைச்சாலைகளில் எந்தவொரு நோயாளியும் பதிவாகவில்லை என இதன்போது பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொரோனா தொற்றைக் காரணமாக முன்வைத்து போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் பாரிய குற்றங்களை இழைத்தோர் விடுதலையை பெறுவதற்கு திட்டமிட்டுள்ள இவ்வாறான சதி முயற்சிகளை முறியடிப்பதற்கு சட்ட மா அதிபருக்கு ஒத்துழைப்பு வழங்குவது நீதிமன்றத்தின் பொறுப்பாகும் எனவும் மன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## யாழ் சிறையில் இருந்து நேற்று வரை 325 கைதிகள் பிணையில் விடுவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,ஏப்.03

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து நேற்று வரை கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக 325 கைதிகள் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் கூறப்படுபவை வருமாறு :–

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தல் காரணமாக சிறைச்சாலை திணைக்களம் ஜனாதிபதியுடன் இணைந்து சிறைகளில் உள்ள கைதிகளை நீதிமன்றங்களின் ஊடாகப் பிணையில்விடுதலைசெய்துவருகின்றது.

சிறைச்சாலைக்குள் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டால் பாரிய விளைவுகள் ஏற்படும் என்ற அச்சம் காரணமாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதனடிப்படையில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் கட்டம் கட்டமாக கைதிகள் பிணையில் விடுதலை செய்யப்பட்டு வருகின்றனர்.

அந்த வகையில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து நேற்று வரை 325 கைதிகள் நீதிமன்றங்கள் ஊடாக பிணையில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இன்னும் சில கைதிகளை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. விடுதலை செய்யப்படும் கைதிகளை சிறைச்சாலை அதிகாரிகள் கைதிகளின் பொலிஸ் பிரிவுகளில் உறவினர்களை அழைத்து அவர்களின் உறவினர்களிடம் நேரடியாக கையளிக்கும் நடவடிக்கையையும் மேற்கொண்டு வருகின்றனர்.

## பல்கலைக்கழக மாணவர் கைது

கொரோனா தொடர்பில் இணையத்தளத்தில் வதந்திகளைப் பரப்பியவர் என்க் கூறப்படும் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த மாணவர் எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## உயிரிழந்த மருதானைவாசியின் உறவினர்களுக்கும் கொரோனா

கொழும்பு,ஏப்.03

கொழும்பு – மருதானை பகுதியில் கொரோனாவால் உயிரிழந்தவரின் உறவினர்களுக்கும் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது.

உயிரிழந்த நபரின் மருமகன் மற் றும் பேரனுக்கும் இந்த வைரஸ் தொற்றியுள்ளது தெரியவந்துள்ளது.

இந்த இருவருக்கும் கொரோனா இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

மருதானைப் பகுதியைச் சேர்ந்த 72 வயதுடைய ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றிய நிலையில் அங்கொடை IDH வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## நேற்று மாத்திரம் ஊரடங்கை மீறிய 1,015 பேர் கைது

*நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் ஊரடங்கு சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 1,015 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*இந்தக் காலப்பகுதியில் 254 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*கடந்த 20ஆம் திகதி முதல் இன்று காலை 6 மணி வரையான காலப்பகுதிக்குள் 9,466 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*இந்த காலப்பகுதிக்குள் 2,332 வாகனங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.*

## கொரோனாவின் தாக்கம் கொழும்பில்தான் அதிகம்

இலங்கையில் கொரோனா வைரஸின் தாக்கம் கொழும்பில் தான் கூடுதலாக இருப்பதாக சுகாதார அமைச்சின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

உலகைக் கதி கலங்க வைத்துள்ள கொரோனா வைரஸ் தற்போது தனது வீரியத்தை இலங்கையில் காட்டத் தொடங்கியுள்ளது.

வல்லரசு நாடுகளே வழி தெரியாமல் முழி பிதுங்கி நிற்கும் வேளையில் தற்போது இலங்கையில் கொரோனாத் தொற்று அதிகமாகி வருகின்றது.

தற்போது இலங்கையில் 151 பேர் இந்த வைரஸ் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர். அதில் நால்வர் சுவிஸ் போதகருடன் தொடர்பை பேணிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள்.

இந்நிலையில் சுகாதார அமைச்சின் புள்ளிவிபரங்களின்படி கொழும்பிலேயே கொரோனா வைரஸின் தாக்கம் அதிகமாக உள்ளமை தெரியவந்துள்ளது.



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## என்ன செய்யப் போகிறது அரசு?

மிக முக்கியமான விடயம் ஒன்றை நேற்று கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அம்பலப்படுத்தியிருக்கின்றார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் மூத்த அரசியல்வாதிகளில் ஒருவருமான ரவூப் ஹக்கீம்.

கொரோனா வைரஸ் ஏற்படுத்தியுள்ள தாக்கம் மிக மோசமானது. அது ஒரு பேரிடர்.

இத்தகைய மோசமான ஒரு நெருக்கடியை எதிர்கொள்வதற்கு – உடனடிப் பிரதிபலிப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு – சட்டத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கத் தேவையில்லை என்பது சரியானதுதான். மறுக்க முடியாத நியாயம்தான்.

ஆனால் அதற்காக, எல்லா விடயங்களையுமே – அனைத்து அம்சங்களையுமே – பேரிடரை எதிர்கொள்ளும் நெருக்கடி என்ற காரணத்தைக் காட்டி, சட்ட முறையற்ற விதத்தில் முன்னெடுக்க முடியாது. முன்னெடுக்க அனுமதிக்கவும் இயலாது.

இந்த நெருக்கடியை ஒரு பேரிடராகக் கூட அரசு இன்னும் அறிவிக்கவில்லை. குறைந்த பட்சம் இந்த நெருக்கடியை எதிர்கொள்வதற்காக நாட்டில் அவசரகாலச்சட்டத்தைக் கூட அரசு இன்னும் பிறப்பிக்கவில்லை.

இந்த நெருக்கடியை எதிர்கொள்வதற்கு மக்கள் அசைவியக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும், ஊரடங்கைப் பிறப்பிக்க வேண்டும், அதன்மூலம் மட்டுமே தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த முடியும் என்பதெல்லாம் புரிந்த படியால் – விளங்கியபடியால் – அரசு ஊரடங்கு பிறப்பித்ததும், அதற்கு மக்களும், அரசியல்கட்சித் தலைவர்களும் வேறுபாடுகளை மறந்து முழு ஒத்துழைப்புத் தர முயன்றனர்.

பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு சட்டரீதியானதா என்ற சர்ச்சை இருந்த போதிலும் கூட, அது குறித்த விடயத்தை சவாலுக்கு உட்படுத்தாமல் சகல தரப்புகளும் அரசின் வழிகாட்டலுக்கு இணங்கி, சேர்ந்து, ஒன்றுபட்டு இயங்க முன்னின்றன.

அதற்கு ஒரே காரணம், இந்தப் பேரிடரை ஒன்றுபட்டு எதிர்கொண்டு மீளவேண்டும். அதில் அரசியல் சிறுமைத்தனங்களைக் காட்டக்கூடாது என்ற ஒரே நல்லெண்ணம்தான்.

ஆனால், அந்த நல்லெண்ணத்தை பிற அரசியல் தரப்புகளின் பலவீனமானவோ, தனது மேலாதிக்கப் பலமாகவோ அரசுத் தலைமை பார்த்துவிடக் கூடாது.

இப்போதைய நெருக்கடியையும், அதனால் உரிய காலத்தில் பொதுத் தேர்தலை நடத்த முடியாமல் போன சிக்கலையும், இதே பாணியில் கையாண்டு முடித்து விடலாம் என அரசுத் தலைமை நினைக்குமானால் அது தப்பாகத்தான் போய்முடியும் என்பதை அது உணரவேண்டும்.

சட்ட ரீதியற்ற ஊரடங்கை, சட்ட ரீதியானதை போன்று நடைமுறைப்படுத்துவதைப் போல–

அரசாங்கத்தையும் சட்ட ரீதியற்ற முறையில் தொடரமுடியாது என்பதையே ஹக்கீமின் நேற்றைய பேச்சு எச்சரிக்கையுடன் அரசுக்குக் குறிப்பாக உணர்த்துகின்றது எனலாம்.

இடைநிறுத்தப்பட்ட பொதுத் தேர்தல் நடவடிக்கைகள் இந்த மாதம் 20ஆம் திகதிக்குள் மீளத் தொடங்கினால் மட்டுமே ஜூன் 2ஆம் திகதிக்கு முன்னர் புதிய நாடாளுமன்றம் கூடக் கூடியதாகப் பொதுத் தேர்தலை நடத்தி முடிக்க முடியும் என சுயாதீன தேர்தல் ஆணைக்குழு அரசுத் தலைமைக்கு எழுத்தில் அறிவித்து விட்டது.

அப்படி ஜூன் 2ஆம் திகதி வரைத்தான் இந்த காபந்து அரசு அதிகாரத்தில் தொடர முடியும், அதற்குள் பொதுத் தேர்தலை நடத்தி, புதிய அரசை அதிகாரத்துக்குக் கொண்டு வர வேண்டும் என்றும் –

அப்படிச் செய்ய முடியாவிட்டால், அதற்கு மாற்றீடான நிலையை ஏற்படுத்துவதற்காக புதிய சட்டங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் –

அதற்காக, கலைக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுவது அவசியம் என்றும் –

ஹக்கீம் திட்டவட்டமாகவும், தெளிவாகவும் நேற்றைய கட்சித் தலைவர்கள் மாநாட்டில் உறுதிப்படத் தெரிவித்திருக்கின்றார்.

இதே கருத்தை நேற்றைய கூட்டத்தில் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனும் சுட்டிக்காட்டியிருந்தார்.

அரசுத் தலைமை என்ன செய்யப்போகின்றது? எந்த விலை கொடுத்தாவது ஜூன் 2இற்கு முன்னர் தேர்தலை நடத்த முயற்சிக்கப்போகின்றதா? அல்லது நாடாளுமன்றத்தைக் கூட்டி மாற்று ஏற்பாடுகளைச் செய்யப்போகின்றதா? அப்படியும் இல்லாவிட்டால் சட்ட விரோத முறையிலும் காபந்து அரசைத் தொடரலாம் என்று மனப்பால் குடிக்கின்றதா?

அரசுத் தலைமையின் நோக்கம் என்ன என்பது விரைவில் அம்பலமாகும் என எதிர்பார்க்கலாம்.

## சந்தேகத்தில் யாழ்.வைத்திய சாலையில் மேலும் 8 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

### பணிப்பாளர் வைத்தியர் ரி.சத்தியமூர்த்தி தகவல்



யாழ்ப்பாணம்,ஏப்.03

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் யாழ். போதனா வைத்திய சாலையில் மேலும் 8 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என நேற்றுத் தெரிவித்த வைத்திய சாலை பணிப்பாளர் வைத்தியர் ரி.சத்தியமூர்த்தி அவர்களின் குருதி மாதிரிகள் சேர்க்கப்பட்டு பரிசோதனைகளுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன, அதன் முடிவுகள் எந்நேரமும் எதிர்பார்க்கப்படுகின்றனவெனவும் மேலும் தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்திய சாலையில் உள்ள கொரோனா சிகிச்சை விடுதியில் கடந்த மாதம் 2 ஆம் திகதியில் இருந்து நேற்று வியாழக்கிழமை இரவு வரை 53 பேர் கொரோனா தொற்று இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்டனர்.

அவர்களின் ஒருவருக்கு மட்டும் கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டு, அவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தார்.

ஏனைய 44 பேருக்கும் நடத்தப்பட்ட பரிசோதனைகளின் முடிவின்படி அவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இதில் நேற்று முன்தினம் புதன்கிழமை வைத்திய சாலைக்கு வந்த 6 பேருடைய பரிசோதனை முடிவு அறிக்கை நேற்று வியாழக்கிழமை கிடைக்கப்பெற்றது.

அந்த பரிசோதனை முடிவின்படி அவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் நேற்று வியாழக்கிழமை இரவுவரை யாழ்.போதனா வைத்திய சாலையில் உள்ள கொரோனா சிகிச்சை விடுதியில் 8 பேர் சந்தேகத்தின் அடிப்படையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அனுமதிக்கப்பட்டவர்களுடைய இரத்தமாதிரிகளும் பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இதில் 6 பேருடைய பரிசோதனை முடிவுகள் இன்று வெள்ளிக்கிழமை காலை கிடைக்கப்பெறும் என்றும் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்

## 7 வெளிநாட்டவரை மறைத்து வைத்திருந்த ஹோட்டல் உரிமையாளர்கள் மூவர் கைது

### திருகோணமலை - நிலாவெளியில் சம்பவம்

திருகோணமலை - நிலாவெளி சுற்றுலா வலயப் பகுதியில் உள்ள மூன்று ஹோட்டல்களில் 7 வெளிநாட்டவர்களை மறைத்து வைத்திருந்த ஹோட்டல் உரிமையாளர்கள் மூவரை நேற்று முன்தினம் இரவு உப்புவெளி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

உப்புவெளி பொலிஸார் நேற்று முன்தினம் இரவு இந்த ஹோட்டல்களை சுற்றி வளைத்துள்ளனர். அங்கு இருந்த இரண்டு அமெரிக்க பிரஜைகள், இரண்டு சீனப் பிரஜைகள், ஒரு பின்லாந்து பிரஜை, ஒரு ஸ்கொட்லாந்து பிரஜை மற்றும் ஒரு பிரித்தானிய பிரஜை என ஏழு பேரையும் ஹோட்டல்களிலேயே தாங்க சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தியுள்ளனர் என உப்புவெளி பொலிஸார். தெரிவித்தனர்.

பொலிஸாரின் பாதுகாப்பின் கீழ் இந்த வெளிநாட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் ஒரு வெளிநாட்டவருக்கு விசா அனுமதி காலாவதியாகியுள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள இந்த வெளிநாட்டவர்கள், யாழ்ப்பாணம், ஹபரணை, அனுராதபுரம், நீர்கொழும்பு ஆகிய பிரதேசங்களுக்கு பயணம் செய்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## முஸ்லிம்களுக்கும் உதவிகள் வழங்குகிறார் ஞானசாரதேரர்





கொரோனா வைரஸ் தொற்று பரவுவதை தடுக்கும் வகையில் நாடளாவிய ரீதியில் ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில் பொதுபலசேனாவின் பொதுச்செயலாளர் வண. கலகொட அத்தே ஞானசார தேரர் ஊரடங்குச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலருணவுப் பொருல்களை வழங்கி வருகின்றார்.


அந்தவகையில் முஸ்லிம் குடும்பத் தலைவிகளுக்கு உலருணவுப் பொருள்களை அவர் வழங்கிவைத்துள்ளார்.

நாளை
04.04.2020
சனிக்கிழமை
நட்சத்திரம்: ஆயிலியம் பி.ப 12.46
திதி : ஏகாதசி மாலை 6.01
இராகுகாலம் : 9.09 - 10.39
சுப நேரம் : 03.09 - 4.39

காலைக்கதிர்
Kalaikathir



# கொரோனாவால் 60 லட்சம் பேர் அமெரிக்காவில் வேலை இழப்பு




கொரோனா வைரஸ் தாக்கத்தை அடுத்து அமெரிக்காவில் வேலையற்றவர்களின் எண்ணிக்கை வரலாற்றில் என்றுமில்லாதபடி 60 லட்சத்து 65 ஆயிரமாக எகிறியுள்ளது.

அமெரிக்கத் தொழிற் திணைக்களத்தின் வாராந்த அறிக்கையின்படி வரலாற்றில் என்றுமில்லாத உயரத்தை வேலையற்றவர்கள் எண்ணிக்கை எட்டியுள்ளது.

அதிகாரபூர்வ எண்ணிக்கை இதுவாக இருந்தபோதும் உண்மையான எண்ணிக்கை இதைவிட அதிகமாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தம்மை வேலையற்றவர்கள் என்று பதிவு செய்வதற்கு பல நூற்றுக்கணக்கானவர்கள் ஒரே நேரத்தில் முயற்சிப்பதால் இணையத் தள நெருக்கடி மற்றும் தொலைபேசி அழைப்புக்களை எடுக்க முடியாமல் போனமை ஆகியவற்றால் பலரின் பதிவுகள் தவறவிடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கும் மேலாக பகுதி நேரமாகப் பணியாற்றி வந்தவர்களின் வேலையிழப்பு இதில் கவனத்தில் கொள்ளப்படவில்லை. அதுவும் கவனத்தில் கொள்ளப்படும்போது இந்த எண்ணிக்கை இன்னும் மிகப் பெரியதாக இருக்கும் என்று பொருளாதார வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

தொழிற் திணைக்களத் தகவல்களின் படி இதற்கு முந்திய வாரத்தை விட இரு மடங்காக உயர்ந்துள்ளது வேலையற்றவர்களின் எண்ணிக்கை. முதல் வாரத்தில் 30 லட்சத்து 30 ஆயிரம் பேர் பதிவு செய்திருந்தனர்.

# கொரோனா என்ற வார்த்தைக்கு துர்க்மேனிஸ்தானில் முழுத் தடை

அருகில் உள்ள ஈரான் கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த வார்த்தையையே பயன்படுத்தக்கூடாது என்று துர்க்மேனிஸ்தான் அரசு அறிவித்துள்ளது.

உலகையே கொரோனா வைரஸ் உலுக்கி வரும் நிலையில் அமெ ரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய வல்லரசு நாடுகளும் இதற்குத் தப்பவில்லை. மத்திய பசுபிக் கடலில் உள்ள குட்டி தீவு நாடுகளில் ஒன்றான துர்க்மேனிஸ்தானில் கொரோனா பாதிப்பு அறவே இல்லை.

கொரோனா என்றாலே உலக மக்கள் நடுங்கும் நிலையில், கொரோனா வைரஸ் என்ற வார்த்தையை பயன்படுத்த அந்த நாடு அரசு தடை விதித்துள்ளது. அந்த வார்த்தையை பயன்படுத்தினால் கைது நடவடிக்கை பாயும் என்றும் அறிவித்து இருக்கிறது.

மேலும் ஊடகங்கள், பத்திரிகைகள் உள்ளிட்டவையும் கொரோனா வைரஸ் என்ற வார்த்தையை பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டு உள்ளது. அது மட்டுமல்லாமல் சாலைகளில் அல்லது வேறு பகுதிகளில் முகக்கவசம் அணிந்து யாராவது சென்றால் அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்று அரசு எச்சரித்துள்ளது.

துர்க்மேனிஸ்தானின் அண்டை நாடான ஈரானில் கொரோனா தாக்கம் அதிகரித்து இருக்கும் நிலையில், அரசின் இந்த நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்புகள் எழுந்துள்ளன. அதிபர் குர்பங்குலி பெர்டிமுகாம்தோவ் அரசு சர்வாதிக்கத்தை இதன் மூலம் வலுப்படுத்துகிறது என்று குற்றச்சாட்டுகளும் முன் வைக்கப்படுகின்றன.

ஊடக சுதந்திர தரவரிசையில் கடைசி இடத்திற்கு முந்தைய இடத்தில் துர்க்மேனிஸ்தான் இருப்பது குறிப்பிடத்தக்கது. கடைசி இடத்தில் வடகொரியா இருக்கிறது.

# கொரோனா துளிகள்



★ பாதிக்கப்பட்ட மொத்த நாடுகள், நிலங்கள்: 203

★ உயிரிழந்தோர்: 49 ஆயிரத்து 191

★ தொற்றுக்குள்ளானோர்: 9 லட்சத்து 63 ஆயிரம்

★ குணமானோர்: 2 லட்சத்து 3 ஆயிரம்

★ மோசமான நிலையிலுள்ளோர்: 36 ஆயிரம்

★ ஆகக் கூடுதல் இறப்பு: இத்தாலி நாட்டில் 13 ஆயிரத்து 155

★ ஆகக் கூடுதல் தொற்று: அமெரிக்கா நாட்டில் 2 லட்சத்து 16 ஆயிரம்

★ இறப்பில் இரண்டாம் இடம்: ஸ்பெயின் நாடு, 10 ஆயிரத்து 3

★ ஒரு லட்சத்துக்கு மேல் தொற்று: 3 நாடுகள், அமெரிக்கா, இத்தாலி, ஸ்பெயின்

★ 50 ஆயிரத்துக்கு மேல் தொற்று: 4 நாடுகள், சீனா, ஜேர்மனி, பிரான்ஸ், ஈரான்

★ 15 ஆயிரத்துக்கு மேல் தொற்று: 4 நாடுகள், பிரிட்டன், சுவிற்சர்லண்ட், துருக்கி, பெல்ஜியம்

★ 10 ஆயிரத்துக்கு மேல் தொற்று: 2 நாடுகள், நெதர்லண்ட், ஒஸ்ரியா

★ 5 ஆயிரத்துக்கு மேல் தொற்று: 7 நாடுகள், தென்கொரியா, கனடா, போர்த்துக்கல், பிரேசில், இஸ்ரேல், ஆஸ்திரேலியா, நோர்வே.

★ 3 ஆயிரத்துக்கு மேல் தொற்று:7 நாடுகள், சுவீடன், செஸ்சியா, ரஷ்யா, அயர்லண்ட், டென்மார்க், சிலி, மலேசியா

★ 2 ஆயிரத்துக்கு மேல்: 8 நாடுகள், ஈகுவடோர், பொலன்ட், ரொமேனியா, ஜப்பான், லக்ஸம்பேர்க், பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான், இந்தியா

★ ரஷ்யாவில் அறிவிக்கப்பட்ட வேலை முடக்கத்திற்கான உத்தரவு ஏப்ரல் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருக்கிறது. மிக அவசியமான பணியாளர்கள் தமது வேலையைத் தொடர்வார்கள் ஏனையவர்கள் வீடுகளிலேயே இருக்க வேண்டும். எனினும் அவர்களுக்கு முழுச் சம்பளமும் வழங்கப்படும். கடந்த 24 மணி நேரத்தில் ரஷ்யாவில் தொற்று எண்ணிக்கை 771 ஆக அதிகரித்தது. மொத்தமாக 3 ஆயிரத்து 548 பேர் இதுவரையில் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

★ பல ஆயிரம் கோடிகளைக் கொட்டி உருவாக்கிய தனது அரண்மனைகளை எகிப்து அதிபர் அப்துல்லா பாட்டா அல் சிசி கொரோனா சிகிச்சை மையங்களாக மாற்ற வேண்டும் என்கிற கோரிக்கை வலுத்து வருகின்றது.

★ பிரிட்டனில் கொரோனாவை அடுத்து பேரங்காடிகளில் மக்கள் பொருள்களை வாங்க முண்டியடித்ததைப் போலவே செல்லப் பிராணிகளுக்கான பொருள்களுக்கான கேள்வியும் எகிறியுள்ளது. மக்கள் அவற்றையும் வாங்கிக் குவித்து வருகின்றார்கள். இது தற்காலிகமானது, அச்சம் காரணமாக தமக்கான பொருள்களை மக்கள் வாங்கிப் பதுக்கியதன் நீட்சியாகவே இதனையும் பார்க்க வேண்டும் என்கிறார் சில்லறை விற்பனை ஆய்வாளரான ரிச்சர்ட் கேமன்.

★ அமெரிக்காவில் 24 மணி நேரத்தில் கொரோனா உயிரிழப்பு 884ஆக உயர்ந்ததை அடுத்து மொத்த எண்ணிக்கை 5 ஆயிரத்தைக் கடந்தது.

★ அமெரிக்கச் சிறைகளில் உள்ள 17 ஆயிரம் கைதிகளும் அவர்களது அறைகளிலேயே அடைக்கப்பட்டனர். சிறை வளாகத்திற்குள் நடமாடவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. சுமார் 20 கைதிகளுக்கும் 34 சிறைக் காவலர்களுக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# வென்லியாங் உட்பட 14 மருத்துவர்களுக்கு மாவீரர் பட்டம் வழங்குகின்றது குபேய் அரசு




கொரோனாவுக்கு எதிரான போரில் உயிரிழந்த 14 சீன மருத்துவர்களையும் மாவீரர்கள் பட்டியலில் சேர்க்கப் போவதாக குபேய் மாகாண ஆட்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

இந்த மாகாணத்தின் தலைநகரான வுகானில்தான் முதன் முதலில் கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டது.

மாவீரர்கள் பட்டியலில் இணைக்கப்பட உள்ளவர்களில் மருத்துவர் லி வென்லியாங்கும் ஒருவர். இவரே கொரோனா குறித்து முதன் முதலில் உலகுக்குத் தகவல் தெரிவித்தவர். அடையாளம் காணப்படாத ஒருவித வைரஸ் காய்ச்சல் வேகமாகப் பரவி வருவதாக அவர் தனது சகாக்களையும் மருத்துவ உலகையும் எச்சரித்திருந்தார்.

இதற்காக அவர் சீனப் பொலிஸாரால் வதந்திகளைப் பரப்பக்கூடாது என்று எச்சரிக்கப்பட்டிருந்தார். பின்னர் கொரோனா தொற்றால் மருத்துவர் லி வென்லியாங் உயிரிழந்தார். அவர் நோய்வாய்ப்பட்டிருந்த போது சீன அதிகாரிகளால் முறையாகக் கவனிக்கப்படவில்லை என்கிற கண்டனம் எழுப்பப்பட்டு வருகின்றது.

# பொருளாதார பேரழிவை இந்தியா எதிர்கொள்ளும்!

## ராகுல் காந்தி எச்சரிக்கை



கொரோனாவை அடுத்து 21 நாள்களுக்கு ஊரடங்கு நடைமுறையில் உள்ள நிலையில். அடுத்துவரப்போகும் மிகப்பெரிய பொருளாதாரப் பேரழிவை எதிர்கொள்ள இந்தியா தயாராக வேண்டும் என்று காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ராகுல் காந்தி இந்திய மத்திய அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள், காங்கிரஸ் சார்பில் செய்ய வேண்டிய பணிகள் குறித்துப் பேசுவதற்காக காங்கிரஸ் கட்சியின் காரியக் கமிட்டிக் கூட்டம் காணொலி மூலம் இன்று டெல்லியில் நடந்தது. இதில் தலைவர் சோனியா காந்தி, முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், குலாம்நபி ஆசாத், பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர். ராகுல் காந்தி உள்ளிட்ட ஏராளமான தலைவர்கள் இணைந்தனர்.

இந்தக் கூட்டத்தில் பேசிய ராகுல் காந்தி, அடுத்து வரும் காலங்களில் இந்தியா மிகப் பெரிய பொருளாதாரப் பேரழிவைச் சந்திக்கத் தயாராக வேண்டும் என எச்சரித்தார்.

கூட்டத்தில் ராகுல் காந்தி பேசியதாவது: –

கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்து கொரோனா வைரஸைப் பார்த்து வருகிறோம். பல்வேறு வல்லுநர்களிடம் பேசி வருகிறோம். ஆனால், இதுபோல் புலம்பெயர்ந்த தொழிலாளர்களை அதிகமாக வைத்திருக்கும் எந்த நாடும் எந்த விதமான முன்னேற்பாடும் அதாவது தங்குமிடம், உணவு, இல்லாமல் ஊரடங்கை முயற்சிக்காது.

மத்திய அரசு முன்னேற்பாடில்லாமல் செய்தது, புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் அவர்களின் சொந்த ஊருக்கே திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. ஊரடங்கைப் பிறப்பிக்க முன், புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்குத் தேவையான வசதிகளை மத்திய அரசு செய்திருக்க வேண்டும்.

அடுத்துவரும் காலங்களில் இந்தியா மிகப்பெரிய பொருளாதாரப் பேரழிவை எதிர்கொள்ள தன்னைத் தயார் படுத்திக்கொள்ள வேண்டும்.

காங்கிரஸ் கட்சியினர் அனைவரும் ஏழைகளுக்கும், கூலித் தொழிலாளர்களுக்கும் தேவையான உதவிகளைச் செய்யவேண்டும். இவ்வாறு ராகுல் காந்தி பேசினார்

## அடிமைக்கும் மது கிடையாது உயர் நீதிமன்றம் விதித்தது தடை

குடிக்கு அடிமையானவர்களுக்கு மருத்துவர் பரிந்துரையின் பேரில் மதுபானம் வழங்குவதென கேரள அரசு முடிவு செய்திருந்த நிலையில் உயர்நீதிமன்றம் அதற்கு தடைவிதித்துள்ளது.

கொரோனா ஊரடங்கைத் தொடர்ந்து கேரள மாநிலத்தில் மதுக்கடைகள் மூடப்பட்டு இருக்கின்றன. இதனால் குடிப்பிரியர்கள் தவித்து வருகிறார்கள். குடிக்கு அடிமையானவர்கள் திடீர் என்று அதை நிறுத்துவதால் உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் பாதிக்கப்படுகிறார்கள்.

அவர்களுக்கு கைகால் நடுக்கம், மயக்கம், வலிப்பு, தூக்கமின்மை போன்ற பக்க விளைவுகள் ஏற்படுகின்றன. சிலர் தற்கொலைகூட செய்து கொள்கிறார்கள். இவ்வாறாக கேரளாவில் இதுவரை 3 பேர் தற்கொலை செய்து இருக்கிறார்கள்.

குடிப்பழக்கத்தை விடமுடியாத குடிமக்களுக்கு கேரள அரசு சிறப்பு 'பாஸ்'கள் வழங்க முடிவு செய்தது. இதற்கான உத்தரவு கடந்த திங்கட்கிழமை இரவு பிறப்பிக்கப்பட்டது.

குடிப்பழக்கத்தை விட முடியாமல் பக்க விளைவுகளை சந்திப்பவர்களுக்கு மருத்துவர்களின் சிபாரிசுகளின்படி கட்டுப்பாடான அளவில் மதுபானம் வழங்கப்படும் என்று உத்தரவில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

கேரள அரசின் இந்த முடிவுக்கு மருத்துவ அதிகாரிகள் சங்கம் கடும் எதிர்ப்பு தெரிவித்து இருக்கிறது. இதற்கிடையில் கேரள அரசின் இந்த முடிவை எதிர்த்து அம்மாநில உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது மருத்துவர் பரிந்துரையின் பேரில் மதுபானம் வழங்கப்படும் என்ற கேரள அரசின் முடிவுக்கு மூன்று வாரங்கள் தடைவிதித்தது நீதிமன்றம்.

## ஊரடங்கை மீறினால் 2 ஆண்டுகள் சிறை!

### இந்திய அரசு அறிவிப்பு

ஊரடங்கு உத்தரவை மீறுபவர்களுக்கு 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படும் என இந்திய மத்திய அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்தும் வகையில் இந்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, நாடு முழுவதும் கடந்த மாதம் 24ஆம் திகதி முதல் 21 நாட்கள் ஊரடங்கு உத்தரவு பிறப்பித்து உத்தரவிடப்பட்டது. இதனால் பொதுமக்கள் தேவையின்றி வீட்டை விட்டு வெளியில் வரத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஊரடங்கு உத்தரவை மீறுபவர்களுக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய உள்துறை செயலாளர் அஜய் பல்லா அனைத்து மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமை செயலாளர்களுக்கு கடிதம் மூலம் தகவல் தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில், கடந்த மாதம் 24ஆம் திகதி பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவை மீறும் எந்த நபரும் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார். அவர்களுக்கு 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

இதேபோல், வதந்தி பரப்பினாலும் அபராதத்துடன் கூடிய 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 309 பேருக்குக் கொரோனா தமிழகத்திற்கு 2ஆம் இடம்

மூன்று நாளைக்கு முன்பு 50 பேருக்கு மட்டுமே தொற்றி இந்தியாவில் 2ஆவது இடத்தில் இருந்த தமிழ்நாடு இரண்டு நாட்களில் கிடுகிடுவென உயர்ந்து மகாராஷ்டிராவிற்கு அடுத்தாக 2ஆவது இடத்திற்கு வந்துள்ளது. 309 பேருக்கு தமிழகத்தில் தொற்று ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் கரோனா நோய்த்தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் கடுமையாக எடுக்கப்பட்டு வருகின்றன. சமுதாயப் பரவல் ஏற்பட்டுவிடாமல் தடுக்கும் முயற்சியில் கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அத்தியாவசியத் தேவையைத் தவிர்த்து



வெளியில் வருபவர்கள்மீது காவல்துறை வழக்குப்பதிவு செய்து வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன.

கொரோனா வால் பாதிக்கப்பட்டோர் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். அதேபோல் வெளிநாட்டிலிருந்து வருபவர்களும் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மட்டும் 110 பேருக்கு தொற்று கண்டுபிடிக்கப்பட்டு எண்ணிக்கை 234 ஆக உயர்ந்தது. தமிழகம் 3ஆவது இடத்திற்கு முன்னேறியிருந்தது.

நேற்று மேலும் 75 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை சுகாதாரத்துறைச் செயலாளர் தெரிவித்தார். இதையடுத்து 309 ஆக உயர்ந்தது. அதனால் இரண்டாம் இடத்தில் இருந்த கேரளாவை கீழே தள்ளிவிட்டு இரண்டாம் இடத்துக்கு முன்னேறியுள்ளது தமிழகம்.

மேலும் பலருக்கு எடுக்கப்பட்ட சோதனை முடிவுகள் வரவேண்டியுள்ளன என அரசு தெரிவித்துள்ளதால் எண்ணிக்கை மேலும் கூடும் எனத் தெரிகிறது. தற்போது அகில இந்திய அளவில் எண்ணிக்கை விபரம் 416 பேருக்கு தொற்றுடன் மகாராஷ்ட்ரா முதலிடத்தில் உள்ளது. 309 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் தமிழகம் இரண்டாவது இடத்திலும், 286 பேருக்கு பாதிப்பு உள்ள நிலையில் கேரளா மூன்றாவது இடத்திலும், 219 பேருடன் டெல்லி நான்காவது இடத்திலும் உள்ளன.

இந்தியா முழுவதும் 2ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது.

## பிறந்து மூன்றே நாட்களே ஆன பச்சிளம் சிசுவிக்கும் கொரோனா

### மும்பையில் நேர்ந்த பரிதாபம்



மும்பையில் பிறந்து 3 நாள்களே ஆன பச்சிளம் குழந்தை கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், பிரசவம் நடந்த மருத்துவமனையின் அலட்சியமே இதற்கு காரணம் எனக் குழந்தையின் தந்தை குற்றம்சாட்டியுள்ளார்.

மும்பை செம்பூர் பகுதியிலுள்ள மருத்துவமனையில் கடந்த வாரம் அனுமதிக்கப்பட்ட பெண்ணுக்கு குழந்தை பிறந்த நிலையில், அவர்கள் தங்க வைக்கப்பட்டிருந்த வார்டிலேயே கொரோனா பாதிப்புக்குள்ளானவரையும் அனுமதித்த மருத்துவமனை நிர்வாகம், அந்த விவரத்தையும் தெரிவிக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

அவர்களைக் காலி செய்ய வற்புறுத்தியதோடு, சிகிச்சையளிக்கவும் யாரும் வராத நிலையில் தான் கொரோனா நோயாளி தங்களுக்கருகில் தங்கியிருந்தது அவர்களுக்குத் தெரிய வந்ததாம். இதையடுத்துத் தங்கள் சொந்த

செலவில் பரிசோதனை செய்த போது குழந்தைக்கும், தாய்க்கும் தொற்று உறுதிப் செய்யப்பட்டது என்று அவர் கூறினார்.

இதற்குக்காரணமான மருத்துவமனை மீது உரிய நடவடிக்கை எடுக்க பிரதமர் மோடி, மகாராஷ்டிர முதலமைச்சர் உள்ளிட்டோருக்கு குழந்தையின் தந்தை கோரிக்கை விடுத்துள்ளார்.

## இன்று மக்களிடம் பேசுகிறார் மோடி

இன்றுகாலை 9மணிக்கு வீடியோ மூலம் மக்களுக்குத் தகவல்களைப் பகிரவுள்ளதாகப் பிரதமர் மோடி டுவிட் செய்துள்ளார்.

உலகை அச்சுறுத்திகொண்டு இருக்கும் கொரோனாவைரஸ்தற்போது இந்தியாவில் மிக வேகமாக பரவி வருகிறது. தொடக்கத்தில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தது. தற்போது நாளுக்கு நாள் இந்த எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

பிரதமர் நரேந்திர மோடி கடந்த மாதம் நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். அப்போது கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த ஊரடங்கை கடைபிடிக்குமாறு கேட்டுக்கொண்டார். இதையொட்டி நாடு முழுவதும் 21 நாள் ஊரடங்கு கடைபிடிக்கப்பட்டது வருகிறது.

கொரோனாவுக்கு எதிராக அரசுகளின் போராட்டம் ஒரு புறம் தீவிரமாக இருக்க மறுபுறம் மக்கள் விதிமுறைகளை மீறி வருகிறார்கள். இது மத்திய, மாநில அரசுகளுக்கு ஏமாற்றத்தை அளித்து வருகிறது.

# கொரோனா வைரஸ்:

## மேற்கத்திய நாடுகள் முகக்கவசம் அணிவதை தவிர்ப்பது ஏன்?



– டெஸ்ஸா வாங் –

ஹாங்கொங், சியோல் அல்லது டோக்கியோ போன்ற ஆசியப் பெரு நகரங்களில் இப்போதெல்லாம் நீங்கள் முகக்கவசம் அணியாமல் சென்றால், உங்களை பலரும் வித்தியாசமாக பார்ப்பார்கள்.

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவத் தொடங்கியதில் இருந்து, முகக்கவசம் அணிவது பல நகரங்களில் கட்டாயமாகி இருக்கிறது. அப்படி அணியவில்லை என்றால் சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்கள் போல நடத்துகிறார்கள்.

செக் குடியரசு மற்றும் ஸ்லோவேகியா போன்ற நாடுகளில் முகக்கவசம் அணிவது கட்டாயம். ஆனால் அதுவே பிரிட்டன், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் முகக்கவசம் அணியாமல் நடப்பது என்பது பெரிய தவறாகக் கருதப்படுவதில்லை.

ஒரு சில நாட்டு மக்கள் முகக்கவசம் அணிவதை கட்டாயமாகப் பின்பற்ற, மற்ற நாடுகளில் இருப்பவர்கள் இதனை பொருட்படுத்தாமல் இருப்பது ஏன்? ஏனென்றால் இது அரசாங்க உத்தரவுகள் அல்லது மருத்துவ அறிவுரைகளை சார்ந்தது மட்டுமல்ல.

இது அந்தந்த நாடுகளின் கலாசாரம் மற்றும் வரலாற்றையும் சார்ந்ததாகும். ஆனால், இந்த வைரஸ் தொற்று மிகவும் மோசமானால், இது மாறுமா? உலக சுகாதார அமைப்பு என்ன கூறுகிறது?

கொரோனா தொற்று பரவத் தொடங்கியதில் இருந்து, இந்த விவகாரத்தில் உலக சுகாதார நிறுவனம் மிகத் தெளிவான அறிவுரையை கூறியிருக்கிறது. இரண்டு விதமான மக்கள் மட்டும் முகக்கவசம் அணிந்தால் போதுமானது.



ஒன்று – உடல்நலம் சரியில்லாதவர்கள் மற்றும் கொரோனா அறிகுறிகள் இருப்பவர்கள். மற்றொன்று – கொரோனா இருக்கக்கூடும் என்று சந்தேகிக்கும் நபர்களை பார்த்துக் கொள்பவர்கள் மற்றும் பராமரிப்பவர்கள்.

வேறு யாரும் முகக்கவசம் அணியத் தேவையில்லை. அதற்குப் பல காரணங்களும் உண்டு. ஒன்று – முகக்கவசம் போதிய பாதுகாப்பு தரும் என்று கருதப்படவில்லை. கொரோனா வைரஸ் தொற்று உடலில் இருந்து வெளியேறும் துளிகள் வழியே மற்றவர்களுக்கு பரவலாம் என்றும் வைரஸ் கிருமி படர்ந்திருக்கும் ஏதேனும் ஒரு பொருளை நீங்கள் தொட்டால் அதன் மூலமாகவும் இது பரவும் என்றும் ஆய்வில் தெரிய வந்துள்ளது.

அதனால் அருகில் உள்ளவர்கள் தும்மினாலோ அல்லது இருமினாலோ, இது போன்ற சூழல்களில் தான் முகக்கவசம் ஒருவரை பாதுகாக்கும். அதனால்தான் அடிக்கடி சோப்பை கொண்டு கைகளை அடிக்கடி கழுவுவதே அதிக பலனை அளிக்கும் என்று வல்லுநர்கள் கூறுகிறார்கள். மேலும், முகக்கவசத்தை கழற்றும்போது கையில் படாதவாறு கவனமாக கழற்ற வேண்டும்.

அது மட்டுமில்லாமல், முகக்கவசம் ஒருவருக்கு தவறான பாதுகாப்பு உணர்வை வழங்கலாம். எனினும் ஆசியாவில் சில பகுதிகளில் பெரும்பாலானோர் முகக்கவசம் அணிகிறார்கள். அவ்வாறு அணிவது பாதுகாப்பானதாகவும், மரியாதையாகவும் பார்க்கப்படுகிறது.

சீனா, ஹொங்கொங், ஜப்பான், தென் கொரியா, தாய்லாந்து மற்றும் தைவான் ஆகிய நாடுகளில், உடல்நலம் நன்றாக இருப்பவர்கள் உள்ளிட்ட யார் வேண்டுமானாலும் இந்த வைரஸ் தொற்றை பரப்புவார்கள் என்ற எண்ணம் மக்களிடையே இருக்கிறது. அதனால், மற்றவர்களிடம் இருந்து தங்களை காத்துக் கொள்ள பலரும் முகக்கவசம் அணிகிறார்கள்.

இதில் சில அரசாங்கங்களே முகக்கவசம் அணியுமாறு மக்களை வலியுறுத்துகின்றன. சீனாவின் சில பகுதிகளில் நீங்கள் முகக்கவசம் அணியவில்லை என்றால் கைது செய்யப்படலாம் அல்லது

ஒரு சில நாட்டு மக்கள் முகக்கவசம் அணிவதை கட்டாயமாகப் பின்பற்ற, மற்ற நாடுகளில் இருப்பவர்கள் இதனை பொருட்படுத்தாமல் இருப்பது ஏன்? ஏனென்றால் இது அரசாங்க உத்தரவுகள் அல்லது மருத்துவ அறிவுரைகளை சார்ந்தது மட்டுமல்ல. இது அந்தந்த நாடுகளின் கலாசாரம் மற்றும் வரலாற்றையும் சார்ந்ததாகும். ஆனால், இந்த வைரஸ் தொற்று மிகவும் மோசமானால், இது மாறுமா? உலக சுகாதார அமைப்பு என்ன கூறுகிறது?

தண்டிக்கப்படலாம்.

அதே நேரத்தில் இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில், பலரும் தங்களுக்கு கொரோனா அறிகுறிகள் இருப்பதை மறைப்பதாக சந்தேகம் உள்ளதால், அங்கு பெருநகரங்களில் பலரும் தங்களை மற்றவர்களிடம் இருந்து காத்துக் கொள்ள முகக்கவசங்கள் அணிகிறார்கள்.



சில நாடுகளில் கொரோனா தொற்றுப் பிரச்சினை ஏற்படும் முன்னரே இவ்வாறு முகக்கவசம் அணிவது அவர்கள் கலாசாரத்தில் உண்டு. அவை ஃபேஷனாக பார்க்கப்படுகிறது. உதாரணமாக ஹொங்கொங்கில் உள்ள சாலையோரக் கடைகளில் ஹெலோ கிட்டி முகக்கவசங்கள் மிகவும் பிரபலமாக இருந்தன.

மேலும் தெற்காசியாவில் பலரும் தங்களுக்கு உடல்நிலை சரியில்லை என்றால் முகக்கவசம் அணிவது வழக்கமான ஒன்றே. ஏனெனில் சத்தமிட்டு வெளிப்படையாக இருமுவது அல்லது தும்முவது மரியாதை அற்ற செயலாகக் கருதப்படும்.

2003ஆம் ஆண்டு சார்ஸ் வைரஸ் தொற்று ஏற்பட்ட பிறகு, அதனால் மோசமாக பாதிக்கப்பட்ட நாடுகள் அப்போதில் இருந்தே அதன் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்தன. குறிப்பாக ஹோங்கொங். அங்கு சார்ஸ் வைரஸ் தொற்றால் அதிகம் பேர் உயிரிழந்தனர்.

அதனால், இது போன்ற சமூகங்களுக்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் உள்ள ஒரு முக்கிய வேறுபாடு இதுதான். பல ஆசிய நாடுகளில் பழைய நினைவுகள் நீங்காத வடுக்களாக பதிந்திருக்கின்றன.

இந்நிலையில், தென் கிழக்கு ஆசியாவில், குறிப்பாக அதிக மக்கள் தொகை இருக்கும் நகரங்களில், காற்று மாசு காரணமாக முகக்கவசம் அணிவது வழக்கமாக இருக்கிறது.

இப்படியிருக்க இரண்டு ஐரோப்பிய நாடுகள் மட்டுமே முகக்கவசம் அணிவதை கட்டாயமாக்கிஇருக்கின்றன. முகக்கவசம் அணிவதால் வைரஸ் பரவுவதைக் குறைக்க முடியும் என செக் குடியரசு அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார்.

ஆனால், அதற்கான எந்த அறிவியல் ஆதாரத்தையும் அவர் அளிக்கவில்லை. இந்நிலையில், பொது வெளியில் செல்லும் அனைவரையும் முகக்கவசம் அணிய பரிந்துரைக்க வேண்டுமா என்ற விவாதத்தில் அமெரிக்க சுகாதாரத்துறை அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

சாதாரண துணியால் ஆன முகக்கவசங்கள் கூட வைரஸ் பரவுவதைத் தடுக்கலாம் என்று நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் கூறுவதாக வொஷிங்டன் போஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவில் தற்போது என்95 ரக முகக்கவசங்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. ஒரே முகக்கவசத்தை பலமுறை பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படுவதாக சுகாதாரப் பணியாளர்கள் கூறுகின்றனர்.

(08 பக்கம் பார்க்க)

# கட்சித் தலைவர்களின் நேற்றைய மாநாட்டில்...

















# கொரோனா வைரஸ்: மேற்கத்திய ...

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**கவனத்தை ஈர்க்க முகக்கவசம் அணிகிறார்களா?**

முகக்கவசம் அணிவது வைரஸ் தொற்றின் அபாயத்தை நினைவுப் படுத்தும் விதமாக இருந்தாலும், தங்களின் தனிப்பட்ட சுகாதார முறையை வெளிப்படுத்த இது அணியப்படலாம் என்று கூறப்படுகிறது.

நீங்கள் வெளியே போகும் முன்பு முகக்கவசத்தை அணிந்து கொள்வது வழக்கமாகிவிட்டது. சொல்லப்போனால் சீருடை அணிந்து கொள்வது போல. முகத்தை தொடாமல் இருப்பது, கூட்டமான இடங்களை தவிர்ப்பது அல்லது சமூக விலகலை பின்பற்றுவது போன்ற ஒருவரது தனிப்பட்ட சுகாதார முறையை அது காண்பிக்கும் என்கிறார் நடத்தையியல் நிபுணரும் பேராசிரியருமான டொனால்டு லா.

முகக்கவசங்கள் பயனற்றவை என்று கூறிவிட முடியாது. ஆனாலும் அதனால் பலன் இருக்கிறது என்று நாம் நம்புகிறோம். அதனால்தான் அவை சுகாதாரப் பணியாளர்களின் பாதுகாப்பிற்காக வழங்கப்படுகின்றன என்கிறார் ஹாங்காங் பல்கலைக்கழகத்தின் தொற்று நோயியல் நிபுணர் பெஞ்ஜமின் கௌலிங்.

மக்கள் அதிகம் கூடும் இடங்களில் முகக்கவசங்களை பயன்படுத்துவது, ஓரளவிற்கு வைரஸ் பரவலை தடுக்கும் என்று நினைக்கிறேன். தற்போதைய நிலையில், ஒரு சிறு நடவடிக்கை கூட தொற்று பரவலை தடுக்க உதவும் என்று அவர் மேலும் கூறுகிறார்.

இருப்பினும் இதனால் சில பிரச்சினைகளும் இருக்கின்றன. ஜப்பான், இந்தோனேசியா மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளில் முகக்கவசங்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், பயன்படுத்திய முகக்கவசங்களை மக்கள் மீண்டும் மீண்டும் பயன்படுத்துகிறார்கள்.

இது சுகாதாரக் கேடானது. சில பயன்படுத்தப்பட்ட முகக்கவசங்கள் கள்ளச்சந்தைகளில் விற்கப்படுகின்றன. அதே நேரத்தில் மேற்கத்திய நாடுகள் பலவற்றில் முகக்கவசங்கள் அணியும் பழக்கம் கிடையாது.

முகக்கவசம் அணியும் சிலர் தாக்கப்படும் நிலையும் அங்குள்ளது. அங்கு முகக்கவசம் அணிந்து செல்லும் பலரும் ஆசியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், சில நாடுகள் முகக்கவசம் அணிய அறிவுரை வழங்குவது சரியானதாக இருக்கலாம். தற்போது உலக சுகாதார அமைப்பின் அறிவுரையை வல்லுநர்கள் கேள்விக்கு உட்படுத்தியிருக்கிறார்கள்.

**கணக்கில் வராத நபர்கள்**

இந்த வைரஸிற்கான அறிகுறி ஏதும் இல்லாமலேயே பலரும் இத்தொற்றை பரப்புகிறார்கள் என்பதற்கான ஆதாரங்கள் வெளிவருகின்றன.

சீனாவில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மூன்றில் ஒருவருக்கு இதற்கான எந்த அறிகுறிகளும் இல்லை என அந்நாட்டு அரசின் தரவுகள் கூறுவதாக 'சௌத் சைனா மார்னிங் போஸ்ட்' செய்தி நிறுவனம் கூறுகிறது.

யோகோஹாமா துறைமுகத்தில் நின்று கொண்டிருந்த டைமன்ட் பிரின்சஸ் சொகுசுக் கப்பலில் 700க்கும் மேற்பட்டோருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. ஆனால், அதில் பாதி பேருக்கு எந்த அறிகுறியும் தென்படவில்லை.

இவ்வாறு பலருக்கும் எந்த அறிகுறியும் இல்லை என்பதற்காக, அவர்கள் மற்றவர்களுக்கு பரப்பமாட்டார்கள் என்று நினைக்க முடியாது. ஒரு வேளை அனைவரும் முகக்கவசம் அணிந்தார்கள் என்றால், அறிகுறிகள் இல்லாதவர்கள் மற்றவர்களுக்கு வைரஸ் பரப்புவதை தடுக்க முடியும் தானே என்ற கேள்வி எழுகிறது.

சீனாவில் ஏற்பட்ட 80 சதவீத கொரோனா பாதிப்புகள் இவ்வாறு எந்த அறிகுறிகளும் காட்டாதவர்களிடம் இருந்து பரவியிருக்கலாம் என அந்நாட்டில் நடத்தப்பட்ட சமீபத்திய ஆய்வு கூறுகிறது. இது வெறும் ஒரே ஓர் ஆய்வின் முடிவுதான். எதிர்காலத்தில் பல ஆய்வுகள் நடத்தப்பட்டு இதில் பல வியங்கள் சேர்க்கப்படலாம்.

northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 | 021 567 5566
077 336 6443 | 021 222 9581
075 555 7327 | 021 222 2050
071 777 2377 | 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# கொரோனா பேரிடரிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கு கட்சி, நிற, சமய, இன, குல பேதமின்றி ஒன்றிணைவோம்

## நேற்றைய சர்வ கட்சி மாநாட்டில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு



கொழும்பு,ஏப்.03

கட்சி, நிற, சமய, இன, குல பேதமின்றி சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப செயற்பட வேண்டும் எனக் கூறியுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அரசியல், சமய, இன, பேதமின்றி கொரோனா பேரிடரிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கு ஒன்றிணைவோம் எனத் தலைவர்களுக்கு அழைப்பும் விடுத்தார்.

நேற்று அலரிமாளிகையில் இடம்பெற்ற சர்வகட்சி மற்றும் பிரதிநிதிகள் சந்திப்பில்

கலந்துகொண்டபோதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவரது அலுவலகம் விடுத்த செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாரு:–

அனைத்து சந்தர்ப்பங்களிலும் மருத்துவ நிபுணர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாகவே அரசாங்கம் செயற்படுவதாகச் சுட்டிக்காட்டிய பிரதமர் சுகாதாரத் துறையினர் மற்றும் பாதுகாப்புப் பிரிவினரின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாகவே ஊரடங்குச் சட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டார்.

ஒட்டுமொத்த சமூகத்தினதும் முன்னேற்றம் தொடர்பாகக் கவனம் செலுத்தவேண்டிய இச்சந்தர்ப்பத்தில், நாம் அனைவரும் சுகாதார நிபுணர்களின் அறிவுறுத்தல்கள் தொடர்பாகவும் அதிக கவனத்தைச் செலுத்த வேண்டியுள்ளோம் என்று சுட்டிக்காட்டினார்.

சமூக ரீதியாகவும், சமய ரீதியாகவும் அனைவருக்கும் இக்காலப்பகுதியில் சிரமங்கள் ஏற்படலாம். சமூகத்தினதும் மக்களினதும் உயிர்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தி, அந்த சிரமங்களைப் பொறுத்துக் கொண்டு அனைவரும் செயற்பட வேண்டும் எனவும் இதன்போது பிரதமர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் அரசியல் கட்சித் தலைவர்கள், கட்சிப் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர்.

கொரோனா நோயாளர்கள் கண்டறியப்பட்டமை முதல் இப்போது வரை சுகாதாரப் பிரிவினர் செயற்படுத்தியுள்ள வேலைத்திட்டம் தொடர்பாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமும் தனிமைப்படுத்திக் கண்காணிப்பதற்கு இது வரை பின்பற்றிய நடவடிக்கைகள் தொடர்பாக இராணுவத் தளபதியும் நீண்ட விளக்கமொன்றை வழங்கினர்.

அத்தியாவசிய சேவைகளுக்கான விசேட ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷவும் இதில் கலந்துகொண்டமையுடன், சுகாதார அறிவுறுத்தல்களுக்கு அமைவாக மக்கள் வாழ்வினை நடாத்திச் செல்வதற்கு அரசாங்கம் இது வரை முன்னெடுத்துள்ள வேலைத்திட்டம் தொடர்பாகக் கட்சித் தலைவர்களை அறிவுறுத்தினார்.

இதில் கலந்துகொண்ட கட்சித் தலைவர்கள் பலர் கோவிட் வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டம் மற்றும் அதற்குத் தோள் கொடுத்துப் பணியாற்றும் சுகாதாரப் பிரிவினர், அரச ஊழியர்கள் மற்றும் பாதுகாப்புப் பிரிவினரைப் பாராட்டியமையுடன், இந்த வேலைத்திட்டத்தின் வெற்றிக்கு ஒத்துழைப்பு வழங்குவார்கள் எனவ தெரிவித்தனர்.

அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தை சிறப்பாக முன்னெடுப்பதற்க்கு எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் இதன்போது கட்சித் தலைவர்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இந்த சந்திப்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கரு ஜயசூரிய, முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, வண.அதுரலியே ரதன தேரர், பவித்ரா வன்னியாரச்சி, தினேஷ் குணவர்தன, பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், டலஸ் அளகப்பெரும, ஆர். சம்பந்தன், எம்.ஏ. சுமந்திரன், மஹிந்த அமரவீர, செந்தில் தொண்டமான், டக்லஸ் தேவானந்தா, விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணாயக்கார, தயாசிறி ஜயசேகர, விஜித ஹேரத், பாட்டலீ சம்பிக்க ரணவக்க, ரவூப் ஹக்கீம், எம்.எம்.எம். ஹாரிஸ், ரிஷாத் பதியுதீன், மனோ கணேசன், பி.திகாம்பரம், உதய பிரபாத் கம்மன்பில, பேராசிரியர் திஸ்ஸ விதாரண, ரவி கருணாநாயக்க, பைசர் முஸ்தபா, ஏ.எச்.எம். பௌசி, விஜேதாச ராஜபக்ஷ ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மரண அறிவித்தல்

## கனகசபை கந்தசாமி

### (பத்திரிகை விற்பனையாளர்)



காரைநகர் மருதடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை கந்தசாமி நேற்று மாலை (02.04.2020) இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான கனகசபை - குணவதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி - தெய்வானைப் பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், ஜெயந்தினி (ஆசிரியை - யாழ்ற்றன் கல்லூரி), காலஞ்சென்ற ஜெயந்தசிறி மற்றும் பிரதீபன் (தாதிய உத்தியோகத்தர் - யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சத்தியானந்தன் (ஆசிரியர் - மெய்கண்டான் வித்தியாசாலை), தமயந்தி (தாதிய உத்தியோகத்தர் - காரைநகர் வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ் சென்றவர்களான புவனேஸ்வரி, திருநாவுக்கரசு, தில்லைநாதன் மற்றும் புஷ்பவதி, தேவசேனா (மாலா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கோபிகாந்த், கரிஷ்காந்த், சமாந்தி , கேதுசன், மோசிகன், மகீசன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (03.04.2020) காலை 7.00 மணியளவில் மருதடி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மருதடி, காரைநகர்

தகவல்
குடும்பத்தினர்

# சரியான நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் இரு வாரங்களில் அபாயகரமான நிலை வரும்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் எச்சரிக்கின்றது

கொழும்பு,ஏப்.03

இலங்கையில் கொரோனா வைரஸை தடுப்பதற்கான நடவடிக்கைகள் உரிய வகையில் முன்னெடுக்கப்படாவிட்டால் எதிர்வரும் இரண்டு வாரங்களில் அதாவது இம்மாத நடுப்பகுதிக்குள் அபாயகரமான அடுத்தடுத்த கட்டங்களுக்குச் செல்ல நேரிடும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே தெளிவுபடுத்துகையில் –

கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் வகைப்படுத்தலுக்கு அமைய இலங்கை தற்போது 3பு கட்டத்தில் காணப்படுகின்றது.

3பு கட்டம் எனப்படுவது வீடுகளினுள் கூட்டுத் தொற்று நிலையாகும். இவ்வாறு இலங்கையில் தற்போது பல பிரதேசங்களில் வைரஸ் தொற்றுக்குள்ளானோர் இனங்காணப்பட்டுள்ளனர்.

இலங்கை இதிலிருந்து அடுத்த கட்டமான 3ய கட்டத்திற்கு செல்லாமலிருப்பதற்கு தற்போதுள்ளதைவிடவும் கடுமையான செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். 3ய எனும் கட்டம் கிராமம் அல்லது நகரத்தினுள் குழுக்களாக தொற்று நிலை இனங்காணுதலாகும்.

எனவே, தற்போது முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் எதிர்வரும் இரு வாரங்களுக்குள் இலங்கை அடுத்த கட்டத்துக்குச் செல்ல வேண்டியேற்படும். மாறாக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் இதற்கு முதல் கட்டத்துக்குச் சென்று அதன் பின்னர் நோயாளர்கள் அற்ற கட்டத்துக்கும் செல்ல முடியும்.

இதில் 4 ஆவது கட்டம் மிகப் பாரதூரமானதாகும். சமூகத்தினுள் பரவும் நிலையே 4 ஆவது கட்டமாகும்.

80 வீதத்துக்கும் அதிகமாக சமூக இடைவெளியைப் பேணும் நாடுகளே வைரஸ் தாக்கத்திலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவதில் முழுமையான பயனை அடைகின்றன. சமூக இடைவெளி என்பது பாதுகாப்புக்கான பிரதான வழிமுறையாகும் – என்றார்.

இதே வேளை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இவ்விடயங்கள் தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

தற்போது செய்யப்பட்டுள்ள ஆய்வுகளின் அடிப்படையில் இந்த சந்தர்ப்பத்தில் எடுக்கத்தக்க அனைத்து தீவிர நடவடிக்கைகள் மற்றும் உக்கிரமான தீர்வுகள் மூலம் கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்குமாறு உலக சுகாதார ஸ்தாபனம் அங்கத்துவ நாடுகள் அனைத்துக்கும் தீவிரமாக எச்சரித்துள்ளது. இலங்கையிலும் அவ்வாறு முன்னெடுக்க வேண்டிய படிமுறைகள் பல உள்ளன.

கொரோனா வைரஸானது மிக வேகமாகப் பரவும் அதேவேளை திட்டவட்டமான எதிர் நவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதவிடத்து ஒரு நபரிடமிருந்து ஒரு மாதத்திற்குள் இன்னும் 406 பேருக்கு பரவக் கூடிய அபாயமுள்ளது.

நோயாளர்களில் 20 வீதமானோருக்கு நோய் அறிகுறிகள் வெளிப்படமாட்டா. இன்னும் 60 வீதமனோருக்கு மிகவும் எளிய நோய் அறிகுறிகளே வெளிப்படும். அதனால் உண்மையாகவே கொரோனா தொற்றுக்கு இலக்காகி நோயை வேறு நபர்களுக்கு பரப்பும் நோயாளர்களில் 80 வீதமானோர் மேலோட்டமான பார்வைக்கு நோயாளர்களாக இனங்காண முடியாத வகையைச் சேர்ந்தவர்களாவர். அதனை மறைந்திருந்து நோயைப் பரப்பும் வகையாக அடையாளப்படுத்தலாம்.

கொரோனாவை இனங்காணக்கூடிய ஊனளீயூ பரிசோதனையின் உணர் திறன் 70 வீதமாகும். அதாவது இப் பரிசோதனைக்கு உட்படுவோரில் 30 வீதமானோர் உண்மையாக நோயைக் கொண்டிருந்த போதும் நோயாளர்களாக இனங்காணப்படமாட்டார்கள். அவர்களால் ஏனையோருக்கு கொரோனா வைரஸ் பரவக் கூடியதால் இந்நிலை அபாயகரமானதாகும்.

மேலும் கொரோனா பரவலைக் குறைக்கும் வழிமுறையாக மக்கள் நடமாட்டம் கட்டுப்படுத்தப்படுமெனின் அதனை 80 – 90 வீதமாகப் பேணுதல் அத்தியாவசியமாகும். எனினும், மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அடிக்கடி அது தளர்த்தப்படுவதால் திறனான கட்டுப்பாட்டை பேணுதல் பிரயோக ரீதியாக சவாலுக்கு உட்படுகின்றது.

அதே போல் சிறு எண்ணிக்கையான மக்கள் பொறுப்பின்றிய விதத்தில் செயற்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. அம் மக்களின் எண்ணிக்கை சிறியதாக இருப்பினும் அவர்களால் விளையக் கூடிய பாதகம் மிகப் பெரியதாகும்.

இவ்வாறான காரணிகளை வைத்து இலங்கையினுள் கொரோனா வைரஸிற்கு முகங்கொடுக்கும் வழிமுறையானது கீழ் குறிப்பிடப்படும் வகையில் அமைய வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி 3 பிரதான காரணிகள் முன்மொழியப்படுகின்றன:–

தனிநபர்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தல் (ஆகக் குறைந்தது 80 வீதமான கட்டுப்பாட்டை உறுதிப்படுத்த வேண்டும்).

தீவிரமான விதத்தில் நோயாளர்களை இனங்காணுதல் (பரிசோதனை வசதிகளை மேம்படுத்தல்).

நோய் சிகிச்சைக்கான பிரத்தியேகமாக மருத்துவமனைகளை ஏற்பாடு செய்தல்.

இவையே எமது முன்மொழிவுகளாகும் – என்றுள்ளது.

காலைக்கதிர் Kalaikathir

## ஓடி விளையாடு



16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கானது

தினம் ஒரு தலைப்பு

## சித்திரப்போட்டி

**இன்று (03/04/2020) தலைப்பு**
**ஓடி விளையாடு**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623**

# இறக்குமதிகளை நிறுத்தி வரையறை செய்ய முடிவு



கொழும்பு,ஏப்.03

எரிபொருள் மற்றும் மருந்துப் பொருள்கள் தவிர்ந்த ஏனைய பொருள்களின் இறக்குமதியை இரத்து செய்யவும் வரையறைக்கு உட்படுத்தவும் அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக அமைச்சரவை இணைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை அறிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், எதிர்வரும் காலத்தில் இலங்கையில் வலுவான உற்பத்தியை மேற்கொள்ளும் பொருட்டே அரசாங்கத்தால் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாவும் தெரிவித்தார்.

மேலும் கொரோனா வைரஸால் ஏற்பட்டுள்ள பொருளாதார பாதிப்புகள் தொடர்பில் கலந்துரையாட உலக நாடுகளை ஒன்றிணைத்த சம்மேளம் ஒன்றை நடத்துவதற்கும் அமைச்சரவை கவனம் செலுத்தியுள்ளது.

# கொரோனாவுக்காகத் தடுப்பில் இருந்த இளைஞருக்கு மலேரியா

## மீண்டும் இலங்கைக்குள் புகுந்தது அது?

கொழும்பு,ஏப்.03

கல்பிட்டி பகுதியில் வெளிநாட்டிலிருந்து வந்த நபர் ஒருவர் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்.

நுரைச்சோலை – ஆழங்குடா பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞர் ஒருவரே மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இந்த நபர் கடந்த மாதம் கென்யாவிற்கு சுற்றுலா சென்று நாட்டிற்கு வருகை தந்த நிலையில் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டிருந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தப்பட்டு வீடு திரும்பிய பின்னர் சுமார் 3 தினங்கள் கடந்த நிலையில் அந்த இளைஞர் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பது கண்டறியப்பட்டுள்ளதாக தேசிய மலேரியா ஒழிப்பு நடவடிக்கையின் பணிப்பாளர் வைத்தியர் பிரசாத் ரணவீர தெரிவித்துள்ளார்.

மலேரியா நோயை முழுமையாகக் கட்டுப்படுத்திய நாடாக இலங்கை பெயர்பெற்றுள்ள போதிலும் இப்போது இங்கு ஒருவர் இனங்காணப்பட்டுள்ளார்.

# கொரோனாவினால் இறந்தவர்களின் ஜனாஸாவை எரிப்பதா? முஸ்லிம்களின் எதிர்ப்பை அரசு பொருட்படுத்தவில்லையாம்!

கொழும்பு,ஏப்.03

*கொவிட் -19 வைரஸ் தொற்றினால் இறந்தவர்களின் ஜனாஸாக்களை தகனம் செய்யாமல் நல்லடக்கம் செய்வது தொடர்பில் முன்னாள் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் நடத்திய கலந்துரையாடல் திருப்தியளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.*

*இது தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஊடகப் பிரிவு நேற்று மாலை விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-*

கொவிட் –19 வைரஸ் தொற்றினால் இறந்தவர்களின் ஜனாஸாக்களை தகனம் செய்யாமல் நல்லடக்கம் செய்வது தொடர்பில் முஸ்லிம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று சிரேஷ்ட அரசியல்வாதி ஏ.எச்.எம். பௌஸியின் இல்லத்தில் ஒன்றுகூடி கலந்துரையாடினார்கள். இதன்பின் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இது பற்றி பிரதமருடன் பேசுவதற்கு இணக்கம் காணப்பட்டது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கட்சித் தலைவர்கள் கூட்டம் நேற்று அலரி மாளிகையில் நடைபெற்றது. இதில் முஸ்லிம் அரசியல்வாதிகள் தரப்பில் முன்னாள் அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், பைசர் முஸ்தபா, முன்னாள் இராஜாங்க அமைச்சர்களான ஏ.எச்.எம். பௌசி, அலிசாஹிர் மௌலானா, எச்.எம்.எம். ஹரீஸ், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கொவிட் –19 வைரஸ் தொற்றினால் இறந்தவர்களின் ஜனாஸாக்களை எரிக்காமல் நல்லடக்கம் செய்யக் கோரும்போது சிலர் பிரச்சினைகளை ஏற்படுத்தலாம் என்பதால், பிரதமர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் இதுவிடயமாக தனிப்பட்ட ரீதியில் பேசுவதற்கு முஸ்லிம் அரசியல்வாதிகள் தரப்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. ஆனால், கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அனைவரின் மத்தியிலும் பகிரங்கமாக பேசுவதற்கே பிரதமர் இணங்கியுள்ளார்.

இதற்கமைய முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம், கொவிட் –19 தொற்று காரணமாக மரணிக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதற்கு நியாயபூர்வமான காரணங்களை ஆதாரங்களுடன் விளக்கிக் கூறினார்.

உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டல், யுனஸ்கோ நிறுவனத்தின் நியதி என்பவற்றில் காணப்படும் முக்கிய அம்சங்களை சுட்டிக்காட்டி, இத்தகைய தொற்றுநோயினால் இறப்பவர்களை எரிக்காமல், அதற்கு மாற்றீடாக அடக்கம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மருத்துவ ரீதியாக மட்டுமல்லாது மக்களின் சமய ரீதியான உணர்வுகளுக்கு மதிப்பளித்து நடந்துகொள்வதன் அவசியம் பற்றி அவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றையும் அவர் காண்பித்துள்ளார்.

உலக சுகாதார நிறுவனத்தின் தீர்மானத்துக்கமைய, இறந்தவரின் உடலை குறிப்பிட்ட ஆழத்தில் உரிய நிபந்தனைகளுக்கு அமைவாக அடக்கம் செய்யலாம். வழங்கப்பட்ட அறிவுறுத்தலில் சடலம் அவசர அவசரமாக அகற்றப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. புதைப்பதன் ஊடாக இறந்தவரின் உடலிலிருந்து அவ்வாறான கிருமிகள் பரவும் என குறிப்பிடப்படவில்லை போன்ற விடயங்களையும் ரவூப் ஹக்கீம் இதன்போது சுட்டிக்காட்டியிருந்தார்.

அரசாங்கம் முதலில் வெளியிட்ட சுற்றறிக்கையின்படி, கொவிட்–19 தொற்றினால் மரணமடைந்தவரின் உடலை அடக்கம் செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டிருந்த நிலையில், நீர்கொழும்பில் இரண்டாவது மரணம் நிகழ்ந்த பின்னர், மரணமடைந்தவர்களின் உடல்களை எரிக்க வேண்டும் என மாற்றம் செய்யப்பட்ட சுற்றறிக்கைக்கு ரவூப் ஹக்கீம் இதன்போது விசனம் வெளியிட்டுள்ளார்.

கூட்டத்தில் பிரசன்னமாயிருந்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் அனில் ஜயசிங்க இதன்போது எதிர்க் கருத்துகளை தெரிவித்துள்ளார். உடலை அடக்கம் செய்வதால் நிலத்தடி நீர் மாசடையும் என்றும் அவர் கூறியுள்ளார். அரசாங்கத்தின் சார்பில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியும் கருத்து தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஆளும் தரப்பைச் சேர்ந்த விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோரும் முஸ்லிம் தரப்பின் கோரிக்கைகளுக்கு எதிர்ப்புக் காட்டியுள்ளனர். ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு அனுமதித்தால், பொதுமக்கள் மத்தியில் குழப்பம் ஏற்படும் எனவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

முன்னாள் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தரப்பில் ரவூப் ஹக்கீம் ஆதாரங்களுடன் முன்வைத்த கோரிக்கைகளுக்கு துரதிஷ்டவசமாக சாதகமான பதில்கள் எவையும் கிடைக்கவில்லை.

முன்னாள் அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், பைசர் முஸ்தபா ஆகியோர் இதுபற்றி விரிவாகவும் விஞ்ஞானபூர்வமாகவும் மீளாய்வு செய்வதற்கு மருத்துவத் துறைகளை சார்ந்த நிபுணர்கள் மற்றும் விஞ்ஞானத்துறை நிபுணர்கள் ஆகியோர் உள்ளடங்கிய குழுவொன்றை அவசரமாக நியமிக்குமாறு வேண்டுகோள் விடுத்தனர். அதுகுறித்து யோசிப்போம் என பிரதமர் கூறியுள்ளார். – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தினம் ஒரு தலைப்பு

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்

## சித்திரப்போட்டி




நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் ‘மழைக் காலம்’ எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர். தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிகமாக தெரிவுசெய்யப்பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.



படம் 1



படம் 2



படம் 3

**படம் 1**
வரைந்தவர்
அ. க. ரிஷாளன் – தரம் 11
யா/பரியோவான் கல்லூரி

**படம் 2**
வரைந்தவர்
டி. அபிலேஷ் – தரம் 10
யா/புனித பத்திரிசியார் கல்லூரி

**படம் 3**
வரைந்தவர்
லோகேஸ்வரன் கோபிகா – தரம் 12
யா/சுண்டுகுளி மகளிர் கல்லூரி

இந்த மூன்று சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.
இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு –
‘ஓடி விளையாடு’

தி. கோவேழிலன் - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

லோ. நித்திலா - தரம் 4
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

வ. கார்ணிகா - தரம் 2
யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி

பா. ஹரிஷ் -தரம் 4
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

பா. பிரியேஷ் - தரம் 1
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

வசந்தரூபன் அபிஷன் - தரம் 3
சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை

கே. தர்சன் - தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

எஸ். அக்ஷன்யா - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

எஸ். ஹரினி - தரம் 2
யா/ புனித டொன் பொஸ்கோ வித்தியாலயம்

லோ. சிவயாணு - தரம் 7
யாழ். இந்து மகளிர் கல்லூரி

மயூரன் தேனுகா - தரம் 10
யா/ வேலணை மத்திய கல்லூரி

சி. சிவகலை - தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

கு. ஆதிகேசவன் - தரம் 10
யா/ ஹாட்லிக் கல்லூரி

பா. தனுபன் - தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

சு. அஷ்வின் - தரம் 2
வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்

த. சம்யுக்தா - தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

த. சுதந்திரா - தரம் 6
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

செந்தூரன் அபிஷ்கன் - தரம் 4
யா/ மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி

பரணிதரன் பிரெதிகா - தரம் 5
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

பரணிதரன் டொன் - தரம் 3
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

இ. பவிஷான் - தரம் 2
யா/ வதிரி வடக்கு மெதடிஸ்தமிழ் கலவன் பாடசாலை

உ. சபீனா - தரம் 10
யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை

அரவிந்தன் அபீனிதா - தரம் 5
யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை

இ. சிந்தூரிக்கா - தரம் 2
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

டி ஹரிஷ்மன் - தரம் 8
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி

பிரபாஜிதன் சஸ்யுமன் - தரம் 1
கிளிநொச்சி பிரமந்தனாறு மகா வித்தியாலயம்

பிரபாஜிதன் பவிஷ்னன் - தரம் 2
கிளிநொச்சி பிரமந்தனாறு மகா வித்தியாலயம்

பாஸ்கரன் சதுர்ஜன் - தரம் 10
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி

சுந்தரலிங்கம் பிரவீன் - தரம் 10
யா/ மீசாலை வீரசிங்கம் வித்தியாலயம்

ஐங்கரன் ஆரணி - தரம் 5
யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை



## மருதானையில் 2800 பேர் முற்றாக முடக்கநிலையில்!

கொழும்பு, ஏப். 03

மருதானையிலுள்ள இமாமுல் அரூஸ் மாவத்தையிலுள்ள 230 குடும்பங்களைச் சேர்ந்த 819 பேரைக் கொண்ட பகுதி முற்றாக முடக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மருதானையைச் சேர்ந்த முதியவர் ஒருவர் நேற்று முன் தினம் இரவு உயிரிழந்திருந்த நிலையிலேயே இப்பகுதி தற்போது முடக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியிலேயே உயிரிழந்த நபர் வசித்து வந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மருதானையிலுள்ள ஆர்னோல்ட் ரத்நாயக்க மாவத்தையிலுள்ள 2000 பேர் வசிக்கும் பகுதியும், இதே காரணத்தின் அடிப்படையில் முடக்கப்பட்டுள்ளது.

## கொரோனா மரணங்களுடன் சிகரட்டுக்குத் தொடர்பாம்!

### சுகாதாரப் பணிப்பாளர் எச்சரிக்கை

கொரோனா வைரஸ் மரணங்களுடன் தொடர்புள்ளதாக சிகரட் உள்ளது. அது விற்பனை செய்வது மரணத்தை விற்பனை செய்வது போன்றது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனா தொற்று மிக வேகமாக பரவிவரும் சூழலில், புகைப்பிடிப்பவர்களை கொரோனா தொற்று அதிகமாக தாக்குவதாக ஆய்வுகளின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் தகவல் வெளியிட்டுள்ள சுகாதார சேவைகளின் பணிப்பாளர் –

வியாபாரத் தளங்களின் உரிமையாளர்கள் சிகரட்டுக்களை விற்பனை செய்யவேண்டாம். சிகரட் கொரோனா வைரஸ் மரணங்களுடன் தொடர்புள்ளதாகவுள்ளது. அது விற்பனை செய்வது மரணத்தை விற்பனை செய்வது போன்றது.

எனவே அதனை விற்பனை செய்வதில் இருந்து விலகியிருங்கள். இந்த விடயத்தில் வர்த்தகர்கள் பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டும். புகைப்பிடிப்பவர்களுக்கு ஏனையவர்களைள காட்டிலும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படுவதற்கு அதிகவாய்ப்புள்ளதாகக்கண்டறியப்பட்டுள்ளது.

எனவே புகைப்பிடிப்பவர்களும் அதனை உடனடியாக கைவிடவேண்டும். இதன் மூலம் தமது உயிர்களை காப்பாற்றிக்கொள்ள முடியும்.– என்றார்.

## களனி கங்கையின் நீரின் தூய்மை அதிகரித்துள்ளது

களனி கங்கையின் நீரின் தூய்மை அதிகரித்துள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் எஸ் அமரசிங்க வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸினால் நாட்டில் நிலவியுள்ள சூழ்நிலைக்கு அமைய தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளமையினால் களனி கங்கையை அண்மித்து இயங்கி வருகின்ற தொழிற்சாலைகளின் கழிவுகள் கங்கையில் கலப்பதில்லை.

இதனாலேயே நீரின் தூய்மை தன்மை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடுவலை மற்றும் கலுவெல ஆகிய பகுதிகளில் பெற்றுக்கொள்ளப்பட்ட நீர் மாதிரிகளை பரிசோதித்த போதே இந்த பெறுபேறு கிடைக்கப்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

## தனிமைப்படுத்தப்பட்ட குடும்பத்தினர் விடுவிப்பு

திருகோணமலை,ஏப்.03

திருகோணமலை கண்டி வீதி, ஐந்தாம் கட்டை பிரதேசத்தில், நேற்று முன்தினம் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பம், தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் லதாகரன் தெரிவித்தார்.

மேற்படி குடும்பத்தைச் சேர்ந்த 28 வயது இளைஞருக்கு, கொவிட் 19 நோய்க்கான அறிகுறிகள் தென்பட்டதை அடுத்து, அவரும் அவரது குடும்பமும் தனிமைப் படுத்தப்பட்டனர்.

எனினும் இளைஞருக்கு கொவிட் 19 வைரஸ் தாக்கம் இல்லைஎனஉறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர், அவரும் அவரது குடும்பமும் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டனர் எனக், கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் லதாகரன் மேலும் தெரிவித்தார்.

## திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் ஒத்திவைப்பு

பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான திருக்கோணேஸ்வரர் கோவிலின் வருடாந்தத் திருவிழா ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவுகின்ற அசாதாரண சூழலையைக் கருத்திற்கொண்டு திருக்கோணேஸ்வரர் கோவிலின் பரிபாலன சபை இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

கோவிலின் வருடாந்தத் திருவிழா, பங்குனி உத்தரமான எதிர்வரும் 6ஆம் திகதி, கொடியேற்றத்துடன் ஆரம்பமாக இருந்தது.

எனினும் கொரோனா தொற்று அச்சத்தால், மக்களின் நலன் கருதி திருவிழாவை அடுத்த வருடத்துக்கு ஒத்திவைப்பதற்கு, நேற்று முன்தினம் புதன் கிழமை நடைபெற்ற நம்பிக்கைப் பொறுப்பாளர் கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்டது.

அதற்கான பிராயச்சித்தமாக சமயத் தலைவர்கள், பக்தர்களின் ஆலோசனையின் பிரகாரம் சம்புரோட்சண யாகம் நிறைவேற்றத் தீர்மானிக்கப்பட்டது.

இதனிடையே வாழ்வாதாரமின்றி இன்னல்களை எதிர்நோக்கியுள்ள சுமார் 200 குடும்பங்களுக்கு, திருகோணமலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உதவியுடன் அத்தியாவசிய உணவுப் பொருள்களை வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.04.2020 இல் வெளியிடப்பெற்றது.